# உதயன்

சுடர் : 36 | கதிர் : 216 | புதன்கிழமை | ஆனி 16 ஆம் நாள் 30 ஜூன் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


# அரசியல்கைதிகளை வைத்து அரசியல் செய்யவேண்டாம்

## உடன் விடுவிக்க வேண்டுமென சஜித் பிரேமதாஸ வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 30

அரசியல் கைதிகளை வைத்து அரசியல் நடத்த வேண்டாம் என்று அரச தரப்பினர் உள்ளிட்ட அரசியல்வாதிகளைக் கேட்டுக்கொள்கின்றேன். அதேவேளை அனைத்து அரசியல் கைதிகளையும் பொதுமன்னிப்பின் கீழ் விரைவில் விடுதலைசெய்யுமாறு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

19 ➤

## கொரோனா இறப்பு 3,000

கொழும்பு, ஜூன் 30

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை மூவாயிரத்தைத் தாண்டியுள்

19 ➤

## 1,709 பேருக்கு நேற்றும் தொற்று

கொழும்பு, ஜூன் 30

நாட்டில் நேற்றும் ஆயிரத்து 709 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்

19 ➤





## எரிபொருள்கள் விலையேற்றம் சைக்கிளில் எதிர்ப்புப் பேரணி

யாழ்ப்பாணம், ஜூன் 30

பெற்றோல் உள்ளிட்ட எரிபொருள்கள் விலையேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணத்தில் நேற்று சைக்கிளில் எதிர்ப்புப் பேரணி இடம்பெற்றது. சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு முன்பாக ஆரம்பித்த இந்தப் பேரணி மானிப்பாய் பிரதேச சபைக்கு முன்பாக நிறைவடைந்தது.

19 ➤

## கொக்குவிலில் இரு வீடுகளுக்குள் மூர்க்கத் தாக்குதல்

### பொருள்கள் அடித்துடைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30

வன்முறைக் கும்பலொன்று கொக்குவில் பகுதியில் நேற்று இரண்டு வீடுகளில் மூர்க்கத்தனமாகத் தாக்குதல் நடத்தியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலும் தெரிவிக்கையில்,

19 ➤

ஜூலை நடுப்பகுதியில்

## பாடசாலைகளை ஆரம்பிக்க துரிதகதியில் நடவடிக்கை?

கொழும்பு, ஜூன் 30

பாடசாலைகளை ஆரம்பிக்க அரசு துரித நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது. ஜூலை மாதம் நடுப்பகுதியில் பாடசாலைகளை ஆரம்பிக்க கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டுள்ளது. கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக நீண்டகாலமாகப் பாடசாலைகள் பூட்டப்பட்டுள்ளன. இந்த நிலையில் மாணவர்களின் கல்வி நிலைகளைக் கருத்தில்

19 ➤

போதையில் வந்தவர்கள்

## போத்தலை உடைத்து தாக்குதல் வீதியில் நின்றவர்கள் படுகாயம்!

கொடிகாமம், ஜூன் 30

மதுபோதையில் வந்தவர்கள் கண்ணாடிப் போத்தலை உடைத்துத் தாக்கியதில், வர்த்தக

19 ➤

## இராணுவச் சித்தாந்தம் நாட்டுக்கு நன்மையல்ல

### வடகொரியாவின் நிலைதான் வரும் சரவணபவன் எச்சரிக்கைத்தொனி!



யாழ்ப்பாணம், ஜூன் 30

இராணுவச் சிந்தாந்தம் ஒரு போதும் எந்தவொரு நாட்டையும் மீட்காது. நாட்டைப் பாதுகாக்கப் போகின்றேன் என்று தான் எமது ஜனாதிபதி கூறுகின்றார். வேறெந்தத் திட்டங்களும்

19 ➤



## சாரதிக்கு நெஞ்சுவலி: மின்கம்பத்துடன் மோதியது பஸ்

கிளிநொச்சி, ஜூன் 30

சாரதிக்கு திடீரென ஏற்பட்ட வலிப்பால், அவர் செலுத்திச் சென்ற பஸ் மின்கம்பத்துடன்மோதி விபத்துக்குள்ளானது.

19 ➤

## யாழில் கொரோனாவால் இருவர் இறப்பு!

101 பேருக்கு தொற்று

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ்ப்பாணத்தில் மேலும் இருவர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். இதேவேளை 101 பேருக்கு நேற்றுத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

19 ➤




## தென்மராட்சி பிரதேச செயலகத்தில் தினமும் 200 வரிப்பத்திரங்கள்

சாவகச்சேரி, ஜூன் 30

தென்மராட்சி பிரதேச செயலக மோட்டார் போக்குவரத்து அலகு நீண்டநாள்களின் பின்னர் இயங்கத் தொடங்கியதையடுத்து தினமும் இருநூறுக்கும் மேற்பட்ட வாகனங்களுக்கு வாகன வரிச் சான்றிதழ் வழங்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டது. கொரோனா அச்சம் காரணமாக மோட்டார் போக்குவரத்து திணைக்க ளத்தால் அனைத்து செயற்பாடுகளும் இடைநிறுத்தப்பட்டிருந்தன. இதனால் வாகன வரிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டது.

வாகன உரிமையாளர்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து பிரதேச செயலகத்தின் மோட்டார் போக்குவரத்து அலகு மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் சேவைகளை வழங்கியது. ஆரம்பத்தில் மிகக் குறைந்த எண்ணிக்கையான வாகனங்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பயணத் தடை நீக்கப்பட்ட பின்னர் புகைப் பரிசோதனை நிலையம் செயற்படத் தொடங்கியதால் தினமும் நூற்றுக்கணக்கான வாகனங்களுக்கு புகைப்பரிசோதனை அறிக்கை வழங்கப்படுகிறது. இதனால் தினமும் 200 க்கு மேற்பட்ட வாகனங்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (த-9)

# 3 மாதங்களுக்கே உணவு கையிருப்பு



### சிவப்பு எச்சரிக்கை இல்லை என்கிறது அரசு

**கொழும்பு,ஜூன் 30**

**அத்தியாவசிய உணவுப் பொருள்களின் கையிருப்பு குறைவது தொடர்பில் இலங்கை இன்னும் சிவப்பு எச்சரிக்கை மட்டத்துக்கு வரவில்லை. எனினும், உணவு கையிருப்புத் தொடர்பில் தீவிர கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது.

நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் கையிருப்பு 3 மாதங்களுக்கும் குறைவாக உள்ள நிலையில், இது சிவப்பு எச்சரிக்கையாகக் கருதப்படுகிறது என்று சுட்டிக்காட்டி ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீங்கள் கூறும் ஒரு பகுதியில் உண்மை இருக்கின்றது. உணவு கையிருப்புத் தொடர்பில் நாம் தீவிர கவனம் செலுத்தியுள்ளோம். அடுத்த மாதம் கடன் தவணையொன்றைச் செலுத்த வேண்டியுள்ளது. அதற்கமைவாக ஒரு பில்லியன் டொலர் செலுத்தப்படும். தங்கத்துடன் எம்மிடம் 4.5 பில்லியன் டொலர் கையிருப்பில் உள்ளது.

எனவே, பிரச்சினை இல்லை என கூறிவிடவும் முடியாது. அவ்வாறான பிரச்சி னையைத் தீர்த்துக்கொள்வது தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. பல வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கும் எதிர்பார்க்கின்றோம்.

நீங்கள் கூறுவது போல் சிவப்பு எச்சரிக்கை மட்டத்தில் நாம் இல்லை என்றாலும், அந்த எச்சரிக்கையை நாம் உதாசீனப்படுத்தவில்லை. மூன்று மாதங்களுக்கான கையிருப்பு தற்போது இருக்கின்றது. எனினும் தற்போதைய உலக நிலவரத்துடன் அதனைத் தக்கவைத்துக்கொள்வது சவால்மிக்க விடயமாகும். எனினும், சிவப்பு எச்சரிக்கை என்ற கட்டம் வருவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன- என்றார். (ஓ.4,44)

# இறக்குமதிகளைக் கட்டுப்படுத்த மத்திய வங்கியால் முன்மொழிவு

கொழும்பு,ஜூன் 30

இலங்கையில் வெளிநாட்டு இருப்புக்களைக் குறைப்பதற்கான முயற்சியாக, இறக்குமதிகளை மேலும் கட்டுப்படுத்துவதற்கு, மத்திய வங்கி முன்மொழிந்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டபிள்யு. டி.லக்ஷ்மன் தெரிவிக்கையில்,

கடந்த சில நாள்களாக, உள்நாட்டுச் சந்தையில் வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மையின் ஊகிக்கப்பட்ட பற்றாக்குறையொன்று தொடர்பில் பல்வேறுபட்ட தனிநபர்கள் மற்றும் ஊடகங்களால் கரிசனைகள் எழுப்பப்பட்டிருந்தன.

குறிப்பாக நமது சுற்றுலாத்துறை காசுப்பாய்ச்சல்கள் மீதான, உலகளாவிய நோய்த்தொற்றின் விளைவாக ஏற்பட்ட மேலதிக அழுத்தங்களுக்கு மத்தியிலும், இலங்கை அரசு அதன் அனைத்து வெளிநாட்டுப் படுகடன் பணிக்கடப்பாடுகளையும் உரிய நேரத்தில் நிறைவு செய்தது.

குறைவடைந்த வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்களுக்கு மத்தியில் கடினமான பணியைச் செய்வதற்கு நாட்டை இயலுமைப்படுத்துவதற்கு, தெரிவுசெய்யப்பட்ட அத்தியாவசியமற்ற இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியிருந்தது. கொரோனாவால் தோற்றம்பெற்ற தொடர்ச்சியான சவால்களைக் கருத்தில் கொண்டு, அத்தியாவசியமற்றதும், அவசரமற்றதுமான இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு மேலும் இடமுண்டு என்று மத்திய வங்கி கருதினாலும், இவ்வாறான சில கட்டுப்பாடுகள் படிப்படியாக நீக்கப்பட்டுள் என.

அரசியல் காரணங்களால் ஊக்குவிக்கப்பட்ட இலங்கைச் சமூகத்தின் சில பகுதியினர் செலாவணி வீதத்தின் எதிர்காலப் பாதை மற்றும் அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான அரசின் இயலுமை குறித்து தொடர்ந்து மேற்கொண்டு வருகின்ற மோசமான ஊகங்களையும், நாங்கள் அவதானித்திருக்கின்றோம்.

இருப்பினும் இறக்குமதிச் செயற்பாட்டில் இடைநிலை மற்றும் மூலதன பொருள்களின் இறக்குமதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதை, அரசும், மத்திய வங்கியும் உறுதிப்படுத்தியுள்ளன. மத்திய வங்கி தற்போது அனைத்து வர்த்தக வங்கிகளின் பங்களிப்புடன் இறக்குமதி மற்றும் வெளிநாட்டு ஒதுக்குகளை நியாயாதிக்க முறையில் முகாமை செய்து கொண்டிருக்கின்றது. அடுத்த சில மாதங்களில் காசுப்பாய்ச்சல்கள் மேம்படவுள்ளதால் மத்திய வங்கியானது, எதிர்கால கொள்கைப் பதிலிறுப்புக்களைத் தீர்மானிப்பதில் தேசிய ஐந்தொகை மற்றும் வெளிநாட்டுப் பேரண்டப் பொருளாதார நிலமைகள் என்பவற்றை மதிப்பீடு செய்யும்.

காசுப்பாய்ச்சல்களின் பொருந்தாத் தன்மையை முகாமை செய்வது தொடர்பில் இடைக்கால தீர்வொன்றாக, வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் உறுதித்தன்மை பேணப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக மத்திய வங்கி வங்கித் தொழில் துறையுடன் நெருக்கமாகச் செயற்பட்டு வருகின்றது.

அதேவேளை, அத்தியாவசிய மற்றும் அவசர இறக்குமதிகளுக்கு முன்னுரிமை அளிப்பதுடன் ஊகத் தன்மையிலான கட்டளைகளை ஊக்கமிழக்கச் செய்வதற்கும் இணங்கியுள்ளது.

தனியார் துறை நிறுவனங்கள் அண்மையில் தளர்த்தப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி விதிமுறைகளைப் பயன்படுத்தி வெளிநாட்டு இணைத்தரப்பினரிடமிருந்து நிதிகளைத் திரட்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது- என்றார். (ஓ.4)

## கௌதாரிமுனை மீனவர்களுக்கும் சீன நிறுவனத்தினருக்கும் தொடர்பு

### கடற்றொழில் அமைச்சரின் கண்டுபிடிப்பு

கொழும்பு.ஜூன் 30

சீன நிறுவனத்துடனான உடன்படிக்கையில் கௌதாரிமுனை மீனவர்கள் கையொப்பமிட்டிருக்காவிட்டாலும், அவர்களுக்கு சீன நிறுவனம் தனிப்பட்ட ரீதியில் ஏதும் வழங்கியதோ தெரியவில்லை என்று கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பூநகரி, கௌதாரிமுனையில் சீன நிறுவனமொன்று சட்டவிரோதமாக கடலட்டை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளது என்று எழுந்துள்ள சர்ச்சை தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடற்றொழில் அமைச்சின் நட்டா நிறுவனத்தின் அனுமதி பெற்றே சீன நிறுவனத்தினர் அங்கு வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணம் அரியாலையில் கடந்த ஆட்சியில் இந்த நிறுவனம் செயற்பட தொடங்கியது. அதன் ஒரு பிரிவு தான் கௌதாரிமுனை.

கௌதாரிமுனை கடலட்டை பண்ணை ஒப்பந்தத்தில், கடற்றொழிலாளர் சங்கங்கள் இதுவரை ஒப்பமிடவில்லை. எனினும் சீன நிறுவனம் தனிப்பட்ட ரீதியில் எதுவும் வழங்கியதோ தெரியவில்லை.

ஏனெனில் அவர்களின் ஒத்துழைப்பில்லாமல் அங்கு கடலட்டை பண்ணையை ஆரம்பித்திருக்க முடியாது. பக்கத்து கிராம மக்களோ, அந்தப் பகுதி மக்களின் அனுமதியில்லாமல் ஒன்றும் செய்ய முடியாது என்ற நிலையில், இந்தப் பண்ணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்றால், அந்தப் பகுதி கடற்றொழிலாளர் சங்கத்தினதோ அல்லது அதன் ஒரு பகுதியினதோ ஏதோ ஒரு விதமான அங்கீகாரம் இருந்திருக்க வேண்டும். என்றார். (ஓ.4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திஸ்ஸமகாராமவில் சீனச் சிப்பாய்களா?

## மறுக்கிறது அரசு

கொழும்பு.ஜூன் 30

திஸ்ஸமகாராம வாவி அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டிருந்தவர்கள் சீனச் சிப்பாய்கள் அல்ல. அவர்கள் அணிந்திருந்த ஆடை சாதாரணமானது என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் சாதாரண ஒரு விடயத்துக்கும் நீதிமன்றுக்குச் செல்லும் நிலைமை காணப்படுகிறது. எனவே நாட்டில் இயங்குகின்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சுயாதீன அமைப்புக்கள் இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்திருக்கலாம். எவ்வாறிருப்பினும் இது தொடர்பில் முழுமையான விசாரணை இராணுவத்தினராலும், குற்ற விசாரணைப் பிரிவினாலும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. எனினும் சிலர் கூறுவதைப்போன்று தொல்பொருளியல் சட்டம் முழுமையாக மீறப்பட்டுள்ளது என்றால் 24 மணித்தியாலங்களுக்குள் சட்ட நடவடிக்கை எடுத்திருக்க முடியும்.

இது தொடர்பில் அரசு என்ற ரீதியில் நாமும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளோம். முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் அவர்கள் அணிந்திருந்தது இராணுவச் சீருடை அல்ல, சாதாரண ஆடை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த ஆடையை அணிந்திருந்தவர்கள் சீனச் சிப்பாய்களும் அல்ல என்று குற்றவிசாரணைப் பிரிவின் விசாரணை அறிக்கையில் குறிப்பி டப்பட்டுள்ளது - என்றார். (ஒ.4)

# தடுப்பூசி நிபுணர் குழுவில் இருந்து பேராசிரியர் நீலிகாவும் பதவி விலகல்



யாழ்ப்பாணம், ஜூன் 30

**ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் மானுடவியல் மற்றும் மூலக்கூறு ஆய்வுகள் துறையின் தலைவர் பேராசிரியர் நீலிகா மலவிகே, மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்தால் நியமிக்கப்பட்ட தடுப்பூசிகள் குறித்த சுயாதீன நிபுணர் ஆலோசனைக் குழுவிலிருந்து பதவி விலகியுள்ளார்.**

தனிப்பட்ட காரணங்களால் அவர் பதவி விலகினார் என்று நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னதாக, கொழும்பு வடக்கு (ராகம) மருத்துவபீடத்தின் இணைப் பேராசிரியர் ஏ.பத்மேஷ் இந்தக் குழுவிலிருந்து பதவி விலகியிருந்தார்.

இதனிடையே, குறித்த குழுவின் ஏனைய உறுப்பினர்களாக பேராசிரியர் ஆனந்த விஜேவிக்ரம, பேராசிரியர் ரஜீவ டி சில்வா, பேராசிரியர் காந்தி நாணயக்கார, பேராசிரியர் சன்ன ரணசிங்க, பேராசிரியர் சரோஜ் ஜயசிங்க, பேராசிரியர் லக்குமார் பெர்னாண்டோ மற்றும் வைத்தியர் ஹசித திசேரா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்த நிபுணர் குழுவின் பணி உலகின் பல நாடுகளில் செயற்படுத்தப்பட்டு வரும் கொரோனாத் தடுப்பூசித் திட்டம் மற்றும் தடுப்பூசி குறித்த உலக சுகாதார அமைப்பின் பரிந்துரைகள் குறித்து ஆய்வு செய்வதும், இலங்கையில் தடுப்பூசி வேலைத்திட்டத்தைப் பரிந்துரைப்பதும் ஆகும். (ஒ.22)

# பஸிலின் வருகை பலருக்கு அச்சம்

## பெரமுன எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 30

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச நாடாளுமன்றுக்கு வருகை தரவிருப்பது, பலருக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. எதிர்த் தரப்பினர் கொரோனா வைரஸ் தாக்கத்தை விட, அவரது அரசியல் பிரவேசத்தைக் கண்டு அச்சம் கொண்டுள்ளனர்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார். பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சக்தியினர் வைரஸ் தாக்கம் மற்றும் எரிபொருள் விலையேற்றம் ஆகியவற்றை மறந்துவிட்டு, தற்போது பஸில் ராஜபக்சவின் நாடாளுமன்ற வருகை குறித்து கருத்துரைக்கிறார்கள். பஸில் நாடாளுமன்றுக்கு வருகைதரும் தீர்மானம் கட்சியின் உள்ளக மட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது. இதனை பிற கட்சியினர் விமர்சிக்க முடியாது. அவர் பலம் வாய்ந்த அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்க வேண்டும் என்று ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரும் பல முறை எடுத்துரைத்துள்ளனர். வீழ்ச்சியடைந்துள்ள தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்த அவரது ஒத்துழைப்பு அவசியம். 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ராஜபக்சக்கள் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற அவர் வகுத்த திட்டங்கள் அனைத்து தேசிய தேர்தல்களிலும் வெற்றி பெற்றுள்ளன. ராஜபக்சர்களை பிளவுபடுத்த ஒரு தரப்பினர் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கின்றனர். எந்தச் சக்தியாலும் அவர்களைப் பிளவுப்படுத்த முடியாது - என்றார். (ஒ.4)





# அந்நியச் செலாவணி இலங்கையில் மோசம்

## மத்திய வங்கியின் அறிக்கை தவறு என்கிறது ஐ.ம.சக்தி

கொழும்பு.ஜூன் 30

இலங்கையில் அந்நிய செலாவணிச் சந்தையில் எவ்வித பிரச்சினைகளும் இல்லை என்று மத்திய வங்கி கூறியிருப்பது மிகவும் வேடிக்கையாகவுள்ளது. உண்மையில் அந்நிய செலாவணிச் சந்தை நிலவரம் மிகவும் மோசமானதாகவே உள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும், பொருளியல் நிபுணருமான ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு சந்தையில் வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மை தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ.டி.லக்ஸ்மன் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். உள்நாட்டுச் சந்தை யில் தற்போது அவதானிக்கப்படுகின்ற வெளிநாட்டு நாணயத்தின் திரவத்தன்மை நிலைமைகள் தற்காலிகமானவையாகும். அவை மிகையான ஊகங்களால் தூண்டப்பட்டுள்ளன என்றும் அவர் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் ஹர்ஷ டி சில்வா அவரது உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில் தெரிவிக்கையில்,

முதலில் பிரச்சினையை ஏற்றுக்கொள்வதே தீர்வை எட்டுவதற்கான முதற்படியாகும் என்று கூறியது யார்? கோத்தாபய ராஜபக்ச அரசில் அங்கம் வகிக்கும் எவரும் நிச்சயமாக அவ்வாறு கூறியிருக்கமாட்டார்கள். இலங்கையில் அந்நியச் செலாவணிச் சந்தையில் எவ்வித பிரச்சினைகளும் இல்லை என்ற மத்திய வங்கியின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது - என்றுள்ளார். (ஒ.4)

# தாதிய உத்தியோகத்தர்கள் அரசுக்கு கடும் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 30

தமது கோரிக்கைகளுக்கு இன்றைய தினத்துக்குள் தீர்வுகளை முன்வைக்காவிட்டால் நாடு பூராகவும் தொடர் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிவரும் என்று அரச தாதி உத்தியோகத்தர்கள் சங்கம் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அரச மருத்துவமனைகளில் தாதியர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் 8 அம்சக் கோரிக்கைகள் சுகாதார அமைச்சுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனால், இதுவரையில் அவற்றுக்குத் தீர்வுகள் கிடைக்கவில்லை என்று அந்தச் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னப்பிரிய நேற்று தெரிவித்துள்ளார்.

இதனால் இன்று வரையில் அரசுக்குக் கால அவகாசத்தை வழங்குகிறோம். அதற்குள் தீர்வுகளை முன்வைக்காவிட்டால் முன்னறிவித்தல் எதுவும் இன்றி தொடர் தொழிற்சங்கப் போராட்டத்துக்குச் செல்வோம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமது கோரிக்கைகளுக்குத் தீர்வுகாணுமாறு வலியுறுத்தி தாதியர் உள்ளிட்ட சுகாதார உத்தியோகத்தர்கள் கடந்த வாரத்தில் நாடு முழுவதும் மருத்துவமனைகளுக்கு முன்னால் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ.22)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எமது வீட்டு வாசல்களிலும் சீன நாட்டவர் கால்பதிப்பர்

யாழ்ப்பாணம் ஜூன் 30



சீனா நாட்டவரின் நடவடிக்கையைப் பார்த்தால் எங்கள் வீட்டு வாசலிலும் வந்து நிற்பார்கள் போன்று உள்ளது என்று அகில இலங்கை மக்கள் எழுச்சிக் கட்சியின் தலைவர் அருள்.ஜெயந்திரன் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

அரியாலையில் கடல் அட்டைக் குஞ்சுகளை வளர்த்து, பூநகரிக் கடலில் அவற்றைக் கொண்டுபோய் விடுகின்றார்கள். வெளிநாட்டவர் எமது கடலில் கடல் அட்டையை வளர்த்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதிசெய்ய அனுமதி என்றால் எமது மக்களுக்கு ஏன் அனுமதி மறுக்கப்படுகின்றது. வடமாகாணத்தில் சீனர்களின் கடல் அட்டை வளர்ப்பு தொடர்பில் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மௌனம் காப்பது ஏன்?. ஆளுமையுடைய தமிழ் தலைவனாக இருந்தால் இதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். கடல் அட்டை வளர்ப்பை எங்களுடைய மக்களும் செய்வதற்கு ஆவணசெய்ய வேண்டும். முன்னைய காலங்களில் எமது மக்கள் கடல் அட்டை வளர்ப்பில் ஈடுபட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தார்கள். என்றார். அத்தோடு, சிறையில் வாடும் அனைத்து அரசியல் கைதிகளும் விடுதலைசெய்யப்பட வேண்டும். அரசியல் கைதிகளின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற இங்கு உள்ளவர்களும் புலம்பெயர்ந்த தேசத்தில் உள்ளவர்களும் ஒன்று சேர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். (ப-20)

# தவறான தகவலை வெளியிட்டதால் மூக்குடைபட்டார் சுமந்திரன் எம்.பி.

## இறுதியில் மன்னிப்பும்கோரினார்

**யாழ்ப்பாணம், ஜூன் 30**

**யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியில் வீதி அபிவிருத்திப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் ஒருவரின் ஒளிப்படத்தை ருவிற்றர் தளத்தில் வெளியிட்டு அவர் சீனப் பிரஜை என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பதிவிட்டிருந்தார். ஆனால் அவர் இலங்கையைச் சேர்ந்தவர் என்று ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தப்பட்டதால் தவறுக்கு மன்னிப்புக் கோருகிறேன் எனத் தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்.**

கௌதாரிமுனை பகுதியில் கடலட்டைப் பண்ணையில் சீனப் பிரஜைகள் பணியாற்றும் தகவல் சில தினங்களுக்கு முன்னர் வெளிவந்திருந்தது. இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தனது ருவிற்றர் தளத்தில் நேற்றுப் பதிவு வெளியிட்டிருந்தார்.

பருத்தித்துறை - மருதங்கேணி வீதி புனரமைப்பு பணியில் சீனப் பிரஜை ஒருவர் ஈடுபட்டுள்ளமை தொடர்பான ஒளிப்படத்தை தனது டுவிற்றர் பக்கத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் பதிவேற்றியிருந்தார். அதில் யாழ்ப்பாணத்தில் பல இளைஞர்கள் வேலையில்லாமல் திண்டாடுகின்ற நிலையில் அவர்களுக்கு ஏன் இந்த திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படவில்லை என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால் வெளியிடப்பட்ட ஒளிப்படத்தில் இருப்பவர் அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர் என்று தெரியவந்துள்ளது. அவர் குடத்தனையில் திருமணம் முடித்து உள்ளார் என்றும் கூறப்படுகின்றது. இந்த உண்மையான தகவல் வெளியானதும், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மீண்டும் ஒரு ருவிற்றர் பதிவொன்றை வெளியிட்டார்.

அதில், குறித்த நபர் சீன நாட்டவர் அல்ல எனவும் அவர் இலங்கையர் எனவும் எனது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

பிழைக்கு வருந்துகிறேன். வடக்கில் பணிபுரியும் உண்மையான சீனர்களின் படங்கள் எதிர்காலத்தில் பதிவேற்றப்படும். என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ.5)

# 200 கிலோ இறைச்சி வவுனியாவில் எரிப்பு

வவுனியா, ஜூன் 30

வவுனியாவில் கைப்பற்றப்பட்ட பாவனைக்குதவாத 200 கிலோ கோழி இறைச்சி நேற்று எரித்தழிக்கப்பட்டுள்ளது.

வட பகுதியில் விற்பனைக்காக கொண்டுவரப்பட்ட குறித்த இறைச்சி வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதியில் கடந்த 26ஆம் திகதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டது.

போதியளவு குளிரூட்டி இன்மையால் இறைச்சி பழுதடைந்தது என்று தெரிவிக்கப்பட்ட நிலையில், அந்த இறைச்சி வவுனியா, நீதிவான மன்றில் ஒப்படைக்கப்பட்டது.

இதன் பிரகாரம் குறித்த இறைச்சி பாவனைக்கு உதவாது என நீதிமன்று உறுதிப்படுத்தியைத் தொடர்ந்து, சுகாதாரப் பரிசோதகர்களால் வவுனியா பம்பமடு குப்பைமேட்டில் எரித்தழிக்கப்பட்டது. (ப-110)

# சௌபாக்கிய வாரம் நாளை ஆரம்பம்

சாவகச்சேரி, ஜூன் 30

அரசின் உணவு உற்பத்தியை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் சௌபாக்கிய வாரம் நாளை முதலாம் திகதி தொடக்கம், ஏழாம் திகதி வரை பிரதேச செயலகங்களால் கடைப்பிடிக்கப்படவுள்ளன.

தென்மராட்சி. பிரதேச சமுர்த்தி அலகினரால் நாளை வெவ்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பிரதேச செயலகத்தில் விவசாயத்தில் ஈடுபடும் 36 சமுர்த்தி பயனாளிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கல், நிரந்தர குடியிருப்பு இல்லாத பயனாளிக்கு சமுர்த்தி வங்கியின் நிதி வழங்கலுடன் பயனாளியின் பங்களிப்புடன் பத்து லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட குடியிருப்பு கையளிப்பு மற்றும் வரணி சமுர்த்தி வங்கியில் கடன் கோரி விண்ணப்பித்துள்ள மூவருக்கு தலா இரண்டு லட்சம். ரூபா வீதம் கடன் வழங்கலும் இடம்பெறவுள்ளன. (ஐ-9)



# மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்துகின்றார் சுமந்திரன்

## கூறுகிறார் அங்கஜன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஜூன் 30

மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்காக சீனா என்ற விம்பம் தேவையற்ற வகையில் கட்டியெழுப்பபடுகிறது. இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்துக்குப் பின்னர், பருத்தித்துறை மருதங்கேணி வீதி அமைக்கும் பணியில் சீன பிரஜை ஈடுபடுகிறார் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்த கருத்து தொடர்பாக கேள்வி எழுப்பிய போதே அங்கஜன் இராமநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அக்கரைப்பற்றை சேர்ந்த இஸ்லாமிய இளைஞர் முகமட் முஸ்தபா முகமட் ஹனீபா குடத்தனையில் தமிழ் பெண்ணை திருமணம் முடித்துள்ளார். அவரே அங்கு பணியில் உள்ளார். அவரது ஒளிப்படத்தையே சீனப் பிரஜை என்று கூறி ருவிட்டரில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பதிவேற்றியுள்ளார்.

மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்காக சீனா என்ற விம்பம் தேவையற்ற வகையில் கட்டியெழுப்பபடுகிறது.

உள்நாட்டில் இருப்பவர்களுடன் இணைந்தே சீனர்கள் கடற்றொழிலில் கடலட்டை வளர்ப்புகளில் ஈடுபடுகிறார்கள் என்றே நான் நினைக்கின்றேன்.

ஏனென்றால் இலங்கை சட்டத்தின்படி வெளிநாட்டவர்கள் இங்கே தொழில் செய்ய முடியாது. ஆகவே உள்நாட்டைச் சேர்ந்த ஒருவருடன் கூட்டாகவே தொழில் செய்ய முடியும்.

கடலட்டை உற்பத்திக்கு உள்நாட்டில் பெரிய அளவில் சந்தை வாய்ப்பு இல்லாவிட்டாலும் கூட, அதற்கான ஒரு சந்தை வாய்ப்பு வெளிநாட்டிலேயே காணப்படுகின்றது. ஆகவே தொழில்நுட்பம் மற்றும் சந்தை வாய்ப்புகளை சீனர்களிடமே எதிர்பார்த்து இருப்பதால் அவர்களை பயன்படுத்த வேண்டிய நிலைமை காணப்படுகின்றது என்று நான் நினைக்கின்றேன்.

அவர்கள் நேரடியாக இங்கு முதலீடுசெய்து தொழில் செய்வதால் உள்ளூர் தொழில் முயற்சிகள் பாதிக்கப்படுமாக இருந்தால் அதில் உண்மையிலேயே பிரச்சினை காணப்படுகின்றது.

அதேநேரம் உள்நாட்டவர்களுடன் இணைந்து சீனர்கள் தொழில் செய்தால் அதனை நாங்கள் பிரச்சினையாக பார்க்கத் தேவையில்லை- என்றார். (ஒ.20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேர்ள் கப்பலால் கரையொதுங்கின 1,034 தொன் பிளாஸ்டிக் கழிவுகள்

கொழும்பு,ஜூன் 30

**இலங்கைக் கடற்பரப்பில் தீப்பற்றிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலிலிருந்து கரையொதுங்கிய ஆயிரத்து 34 தொன் பிளாஸ்டிக் கழிவுகள் 44 கொள்கலன்களில் சேகரிக்கப்பட்டுள்ளன.**



அவை வத்தளைப் பகுதியிலுள்ள களஞ்சியசாலை ஒன்றில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன என்று சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிக்கையில், கப்பலிலிருந்து 40 வீதமான பிளாஸ்டிக் கழிவுகள் மாத்திரமே கரையொதுங்கியுள்ளன. ஏனைய 60 வீதமான பிளாஸ்டிக் கழிவுகள் தொடர்பில் உரிய தரவுகள் கிடைக்கவில்லை. கடலில் ஒரே தடவையில் பெருமளவு பிளாஸ்டிக் கழிவுகள் கலந்த முதலாவது சந்தர்ப்பமாக இந்த விபத்து பதிவாகியுள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது - என்றார். (ஒ.4)



# சமையலறையில் பெண்ணின் சடலம்

## இளைஞன் கைது

கொழும்பு.ஜூன் 30

வீட்டின் சமையலறையில் இருந்து பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. பூண்டுலோயா பழைய சீன் தோட்டத்தில் லயன் குடியிருப்பில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. கூரிய ஆயுதமொன்றால் தாக்கி, குறித்த பெண் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பழைய சீன் தோட்டத்தில் வசித்த 47 வயதான இரு பிள்ளைகளின் தாயே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட தகராறே கொலைக்குக் காரணம் என்று பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தக் கொலையுடன் தொடர்புடைய சந்தேகத்தில், அதே தோட்டத்தில் வசிக்கும் 27 வயதான இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பூண்டுலோயா பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ.4)

# பிரதேச செயலகத்துக்கு வந்த ஆயிரம் தேக்கு மரக்கன்றுகள்

சாவகச்சேரி.ஜூன் 30

வனரோபா திட்டத்தின் கீழ் ஆயிரம் தேக்கு மரக்கன்றுகள் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு நேற்று வந்துள்ளன.

இந்தக் கன்றுகள் பிரதேசத்தில் உள்ள கோவில்கள் மற்றும் பொது அமைப்புகளின் வளாகங்களில் அந்தந்த பிரிவு பொருளாதார அபிவிருத்தி அலுவலர் மூலம் விநியோகிக்கப்பட்டு நடுகை செய்யப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# 27 பேருக்கு நேற்று கோவிட் பரிசோதனை

சாவகச்சேரி, ஜூன் 30

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் நேற்று 15 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனையும்,12 பேருக்கு அன்டிஜென் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டன.

அன்டிஜென் பரிசோதனை மேற்கொண்ட 12 பேருக்கும் தொற்று ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.



பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்ட 15 பேருடைய மாதிரிகளும் ஆய்வுக்காக யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ-9)

# வெளிநாடுகளில் 142 இலங்கையர்கள் கொரோனாத் தொற்றால் உயிரிழப்பு

கொழும்பு.ஜூன் 30

வெளிநாடுகளில் தொழில்புரியும் 142 இலங்கையர்கள் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பணியகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மத்திய கிழக்கு நாடுகள் உட்பட 16 நாடுகளில் தொழில்புரிந்துவரும் இலங்கையர்கள் 4 ஆயிரத்து 800 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்களில் 4 ஆயிரத்து 600 பேர் பூரண குணமடைந்துள்ளனர். இது



வரை 142 பேர் உயிரிழந்துள்ளனர். தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்கள் அனைவரும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்துள்ளனர். அதனால் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காகச் செல்லும் அனைவருக்கும் கொரோனாத் தடுப்பூசி வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. அதற்கமைவாக வெளிநாடுகளுக்குச் செல்வதற்குத் தேவையான தொழில் ஒப்பந்தம், விசா அனுமதிப் பத்திரம் மற்றும் தொழில் நியமனப் பத்திரம் பெற்றவர் ஆகியோர் கொரோனாத் தடுப்பூசி பெறுவதற்குத் தகுதி பெறுவார்கள். இது தொடர்பாக மேலதிக தகவல்களை பணியகத்தின் 1989 என்ற துரித இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி அறிந்து கொள்ளலாம் - என்றுள்ளது. (ஒ.4)



# 2ஆம் கட்ட தடுப்பூசி ஏற்றும் இடங்கள் அறிவிப்பு

சாவகச்சேரி ஜூன் 30

இரண்டாம் கட்ட கொரோனாத் தடுப்பூசி இன்று பின்வரும் இடங்களில் பின்வரும் கிராம அலுவலர் பிரிவுகளுக்கு ஏற்றப்படுமெனவும், முதலாம் கட்டத் தடுப்பூசி ஏற்றிய மக்களை வழங்கப்பட்ட அட்டையுடன் வருகைதருமாறும் சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்தில் மட்டுவில் பிரிவு மக்களுக்கும், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் சாவகச்சேரி நகரம், சாவகச்சேரி வடக்கு மற்றும் நுணாவில் கிழக்கு ஆகிய பிரிவு மக்களுக்கும், கொடிகாமம் பிரதேச மருத்துவமனையில் அல்லாரை, கச்சாய், மற்றும் கொடிகாமம் தெற்கு ஆகிய பிரிவு மக்களுக்கும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

நாளை சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் மண்டுவில், நுணாவில் மேற்கு மற்றும் நுணாவில் மத்தி ஆகிய பிரிவு மக்களுக்கும் தடுப்பூசி ஏற்றப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-9)





# முல்லை. சாலைப்பகுதியில் வெடிபொருள்கள் மீட்பு

முல்லைத்தீவு.ஜூன் 30

முல்லைத்தீவு சாலைப்பகுதியில் வெடிபொருள்கள் சில கடற்படையினரால் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

இரண்டு குண்டுகள் மற்றும் ஒரு கிளைமோர் குண்டு என்பவை இதன்போது மீட்கப்பட்டுள்ளன என்று முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர்.

போரின்போது பாவிக்கப்பட்ட குறித்த வெடிபொருள்கள் நிலத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கடற்படையிரின் புலனாய்வுத் தகவலுக்கு அமைவாக மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்த நிலையில், மீட்கப்பட்ட வெடிபொருள்களைத் தகர்த்து அழிப்பதற்காக சிறப்பு அதிரடிப்படையினரிடம் ஒப்படைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (ஐ-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதி நீதிமன்ற விவகாரத்தில் முஸ்லிம் கட்சிகள் மௌனம்

## இம்ரான் எம்.பி. விசனம்

கொழும்பு.ஜூன் 30

இலங்கையில் நடைமுறையில் உள்ள காதி நீதிமன்றங்களை ஒழிப்பது தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள அமைச்சரவைத் தீர்மானம் தொடர்பில், அரசுக்கு ஆதரவு வழங்கும் முஸ்லிம் கட்சிகள் ஏன் மௌனமாக உள்ளன என்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் சுதந்திரத்துக்கு முன்னைய காலத்திலிருந்து முஸ்லிம் சட்டம் நடைமுறையில் இருந்து வருகின்றது. அதன் படி தோற்றுவிக்கப்பட்டது தான் காதி நீதிமன்றங்கள். இந்த காதி நீதிமன்றங்களை மூடிவிட அமைச்சரவைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதிலிருந்து, இந்த அரசு முஸ்லிம் சமூகத்தை எவ்வாறு கையாள்கின்றது என்பது மிகத் தெளிவாகத் தெரிகின்றது.

இந்தத் தீர்மானம் தொடர்பில் அரசுக்கு ஆதரவு வழங்கிவரும் முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் தேசிய காங்கிரஸ் ஆகிய கட்சிகள் இதுவரை எவ்வித கருத்துகளும் தெரிவிக்கவில்லை. எனவே, இந்த மௌனம் சம்மதத்துக்கு அறிகுறியா என்ற கேள்வி எழுகின்றது.

காதி நீதிமன்றங்கள் முஸ்லிம்களின் வாழ்வியல் சம்பந்தமானவை. சமய விவகாரங்களோடு தொடர்புபட்டவை. இது இந்தச் சமூகத்தின் மிக முக்கிய உரிமைகளுள் ஒன்று.

இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்தவரை இதனை விட உரிமை மீறல் எதுவும் இருக்க முடியாது. எனவே, இந்த விடயத்தில் கட்சிகளின் நிலைப்பாடு என்ன என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்- என்றார். (ஓ.4)

# அதிகரித்த விலையில் அரிசி விற்றால் ரூ. ஒரு லட்சம் தண்டம்

கொழும்பு,ஜூன் 30

**நிர்ணய விலைக்கு மாறாக, அரிசியை விற்பனைசெய்யும் விற்பனையாளர்களுக்கு அறவிடும் தண்டப்பணத்தை ஒரு லட்சம் ரூபாவாக அதிகரிக்க வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன சமர்ப்பித்த யோசனைக்கு, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரி விக்கையில்,

27 அத்தியாவசிய பொருள்களின் நிர்ணய விலையை நிலையாகப் பேணுவதற்காக, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்கள் மற்றும் பிரதான நிலை இறக்குமதியாளர்களிடம் செய்து கொண்ட இரு தரப்பு இணக்கப்பாட்டு ஒப்பந்தம் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

ஒரு சில பிரதேசங்களில் நிர்ணய விலைக்கு மாறாக அதிக விலைக்கு அரிசி விற்பனைசெய்யப்படுகின்றது. அரிசியின் விலையை நிலையான தன்மையில் பேணும் நோக்கில் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

வர்த்தமானியின் தீர்மானத்துக்கு மாறாகச் செயற்படும் வர்த்தகர்களுக்கு எதிராக நுகர்வோர் அதிகார சபையின் ஊடாக உரிய சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நிர்ணய விலைக்கு மாறாக அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் வியாபாரிகளிடமிருந்து அறவிடப்படும் தண்டப்பணம் 2 ஆயிரத்து 500 ரூபாவாகக் காணப்படுகிறது. இதனை ஒரு லட்சம் ரூபாவாக அதிகரிக்க முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்தத் தீர்மானத்தை செயற்படுத்தத் தேவையான சட்ட நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஒரு மாதத்துக்குள் இந்தத் தீர்மானத்தை நாடாளுமன்றில் அவசர சட்டமாக கொண்டுவரத் தீர்மானித்துள்ளோம். ஆகவே ஒரு லட்சம் மெற்றிக்தொன் அரிசியை குறைந்த விலைக்கு இறக்குமதி செய்யத் தீர்மானிக்கப்பட் டுள்ளது. இதற்கான விலைமனுகோரல் பத்திரம் இணையத்தளத்தின் ஊடாக வெளியிடப்பட்டுள்ளது- என்றார். (ஓ.4)

# 'யூரியா'வுக்கு முல்லையில் தட்டுப்பாடு



முல்லைத்தீவு, ஜூன் 30

யூரியா பசளை கிடைக்கப் பெறாததால் முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

மாவட்டத்தில் இந்த ஆண்டு சிறுபோக நெற்செய்கைக்கான கூட்டங்கள் மாவட்டச்செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் ஆகியவற்றில் நடத்தி முடிக்கப்பட்டு சிறுபோக நெற்செய்கையில் விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். கமநல சேவை நிலையங்களுக்கு கிடைக்கப் பெற்ற முதற்கட்ட உரங்கள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

இரண்டாம் கட்ட உரங்கள் விநியோகிக்க முடியாத நிலைமை காணப்பட்டது. கொழும்பில்யூரியா பசளைக்கான தட்டுப்பாடு நிலவியதால் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஏனைய உரங்கள் கிடைக்கப் பெற்ற போதிலும் யூரியா பசளை மிகக் குறைந்தளவில் விநியோகிக்கப்பட்ட நிலையில், சில இடங்களுக்கு யூரியா வழங்கப்படாது போனது. குமுழமுனை கமநல சேவை நிலையத்தில் நேற்றுமுன்தினம் ஒரு விவசாயிக்கு மூன்று ஏக்கர் நெற்செய்கை நிலத்துக்கு 250 கிலோகிராம் யூரியா விநியோகிக்க வேண்டிய நிலையில் 50 கிலோகிராம் யூரியா மட்டும் விநியோகிக்கப்பட்டுள்ளது. துணுக்காய் கமநல சேவை நிலையத்தில் கல்விளான் விவசாயிகளுக்கான உர விநியோகத்தில் யூரியா பசளை விநியோகிக்கப்படவில்லை. முல்லைத்தீவு மாவட்டத்தில் தனியார் கடைகளிலும் யூரியா முடிவடைந்துள்ளது.

இந்நிலையில் காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள பல விவசாயிகள் யூரியாவை நெற்பயிர்களுக்கு விசிற முடியாது நெருக்கடி நிலைமையை எதிர்கொண்டுள்ளனர். (ப-13)

# வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கு முல்லையின் மண்ணை வழங்குக

முல்லைத்தீவு, ஜூன் 30

முல்லைத்தீவு இயற்கை வளம் பொருந்திய மாவட்டம், எனவே அந்த வளங்களைக் கொண்டு மாவட்ட மக்களின் தேவைகளை முதலில் நிறைவுசெய்ய வேண்டும் என துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் ந.தயந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எமது மாவட்டத்தில் வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்ட பயனாளிகள் தமது வீடுகளைக் கட்டி முடிப்பதற்கு மணல் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில், டிப்பர்களில் வெளி மாவட்டங்களுக்கு கொண்டுசெல்லப்படுகின்றது.

இதற்கான அனுமதிகளை வழங்கியவர் யார்?. மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்கள் தமக்கு நீண்ட ஆண்டுகளுக்குப் பின்னர் கிடைக்கப்பெற்ற நிரந்தர வீடுகளை அமைத்துக்கொள்வதற்கு எமது சூழலில் இருந்து மண்ணைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. அபிவிருத்தித் திட்டங்களில் மலசலகூடங்கள் அமைத்தல், விவசாய அபிவிருத்திக்கான வேலைத் திட்டங்கள் மற்றும் ஏனைய பொது வேலைத் திட்டங்கள் ஆகியவற்றுக்கு மணலைப் பெற்றுக்கொள்ள முடியாது உள்ளது. கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னர் வீட்டுத் திட்டங்களை வழங்குகின்ற பிரதேச செயலகங்கள் மணல் அனுமதியை வழங்கி இருந்தன.

ஆனால் அத்தகைய நடைமுறை தற்போது இல்லை. வீட்டுத் திட்டங்களைப் பெற்றுக் கொண்டவர்கள் அதனைக் கட்டி முடிப்பதில் மணல் பிரச்சினை உள்ளது என்று எம்மிடம் தெரிவிக்கின்றனர்.

எமது சூழலில் காணப்படுகின்ற இயற்கை வளம் டிப்பர்களில் வெளி இடங்களுக்குக் கொண்டு செல்லப்படும் நிலையில், சொந்த வளங்களை சட்டரீதியாகப் பயன்படுத்துவதற்கு அதிகாரிகள் அனுமதிகள் வழங்காமல் இழுத்தடிப்பது பொருத்தமற்றது.

எமது வளங்களை எமது மக்களே சட்டரீதியாகப் பயன்படுத்துவதற்கு அதிகாரிகள் இழுத்தடிப்பு மேற்கொள்ளாமல் பிரதேச செயலக ஒழுங்கு முறைகளில் அனுமதிகள் வழங்கப்பட வேண்டும் - என்றார். (ப-13)

# கட்டைக்காடு பகுதியில் வாள்வெட்டு அதிகரிப்பு

## மக்கள் கவலை

கிளிநொச்சி, ஜூன் 30

கிளிநொச்சி, பொலிஸ் பிரிவுக்குக்கு உட்பட்ட பெரியகுளம் கட்டைக்காடுப் பகுதியில் வாள்வெட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் தொழில் தொடர்பாக வெளியிடங்களிலிருந்து வந்து வீதி திருத்தும் பணியில் ஈடுபடுபவர்கள் மற்றும் வேறுபல தொழிலுக்குச் சென்று வருபவர்கள் எனப் பலரும் மாலை 6 மணிக்குப் பின்னர் பெரியகுளம் கட்டைக்காடு பகுதியூடாகப் பயணிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அந்த வீதியூடாகப் பயணிக்கும் போது உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பகுதியில் நேற்றுக் காலை இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் காயமடைந்து, தருமபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார் .

இச் சம்பவம் தொடர்பாக சம்பவ இடத்துக்கு இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டனர். இதை அடுத்து குழு மோதல் நிறுத்தப்பட்டு, மோதலில் ஈடுபட்டவர்கள் தப்பிச் சென்றுள்ளனர். எனவே இவ்வாறு இடம் பெறும் இந்தச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் உரிய நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ப-113)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## ஆட்சி மாற்றமும் ஆதரவும்!

அரசுக்கு எதிராகப் போராடுவதற்கு தமிழ் மக்களும் இணைந்துகொள்ளவேண்டும் என்று தேசத்தைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவரான எல்லே குணவங்ச தேரர் அழைப்பு விடுத்துள்ளார். அவர் இந்த அழைப்பில் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

'காலனித்துவ ஆட்சியிலிருந்து இலங்கைக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுப்பதற்கு இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் தமிழ், சிங்கள, முஸ்லிம் தலைவர்கள் ஒன்றிணைந்து போராடினார்கள்' என்று அவர் குறிப்பிட்டிருந்தார். அது உண்மைதான். ஆனால் அவ்வாறு பல்லினத்தவரும் போராடிப் பெற்றுக்கொண்ட சுதந்திரத்தை தனியொரு மதத்துக்கும் இனத்துக்கும் உரிமையாக்கிக் கொண்டவர்கள் யார்? இலங்கை சிங்கள – பௌத்தர்களுக்கு மாத்திரமே சொந்தமானது என்று மார்தட்டிக் கொள்கின்றவர்கள் யார்?

இப்போதும் ராஜபக்சக்களை அகற்றுவதற்கு, தமிழினத்தையும் கைகோர்ப்பதற்கு பிக்குகள் அழைக்கின்றனர். ராஜபக்சகளை ஆட்சிப்பீடமேற்றி அழகு பார்த்த முத்தெட்டுவ ஆனந்த தேரரும் இப்போது கண்ணீர் வடிக்கின்றார். ராஜபக்சக்களை ஆட்சியிலிருந்து அகற்றுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதில் தமிழ் மக்களையும் பங்காளிகளாக்குவதற்கு அழைக்கின்றனர். இந்த அழைப்புக்கு தமிழ் மக்கள் செவிசாய்க்க வேண்டுமா? ராஜபக்சக்களை ஆட்சியிலிருந்து அகற்றுவதால் மட்டும் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்குமா?

2014ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் ராஜபக்சக்களை ஆட்சியிலிருந்து அகற்றுவதற்கு தமிழ் மக்கள் கை கொடுத்தனர். ஆட்சி மாற்றத்தால் நல்லாட்சி மலர்ந்தது. தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட்டதா? அல்லது நீர்த்துப் போக முயற்சிக்கப்பட்டதா? என்ன நடந்தது?

இலங்கையில் ஆட்சியாளர்கள் மாறுவதால் மாத்திரம் தமிழ் மக்களுக்குப் பலன் இல்லை. ஒருவர் கொட்டனால் அடிப்பவர் என்றால் மற்றவர் கோடரிப்பிடியால் அடிப்பவர். அவர்களின் முகங்கள் வேறாக இருந்தாலும், நோக்கம் ஒன்றுதான். அந்த நோக்கத்துக்கு மூலவேராக இருப்பவர்கள் பௌத்த மதத்துறவிகளான (?) தேரர்கள். இலங்கையில் பௌத்தபீடங்களின் சொல்லையே வேதவாக்காகக் கொள்பவர்கள்தான் இலங்கையின் ஆட்சியாளர்கள். அவர்களை மீறி ஆட்சியாளர்களால் சிறு துரும்பும் அசைக்க முடியாது.

சுதந்திர இலங்கையின் பிரதமர் பண்டாரநாயக்கவின் ஆட்சி சிங்கள – பௌத்தத்தை மூலதனமாகக் கொண்டே நகர்ந்தது. அதிலிருந்து அவர் விலக முற்பட்டபோது பிக்குவாலேயே சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். அன்றிலிருந்து இன்று வரையும் இதுதான் தொடர்கின்றது.

நல்லாட்சி என்று சொல்லப்படுகின்ற அரசின் காலத்தில் கூட இதுதான் நடந்தது. காணாமல் ஆக்கப்படுதலை குற்றமாக அறிவிக்கும் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் பல தடவைகள் ஒத்திவைக்கப்பட்டது. அந்தச் சட்டவரைவு இராணுவத்தினருக்கு எதிராகத்தான் முன்வைக்கப்பட்டிருக்கிறது என இன்றைய ஆட்சியாளர்களும் அன்றைய எதிரணியினருமான ராஜபக்சக்கள் தரப்பால் ஒப்பாரி வைக்கப்பட்டது. அதற்கு மகாநாயக்க தேரர்களும், பௌத்தபீடங்களும் ஒத்தூதின. இறுதியில் அப்போதைய ஆட்சித் தலைவர்களான மைத்திரி ரணில் இணை அந்த சட்டவரைவை கிடப்பில் போட்டது.

இப்போது பிக்குகள் ராஜபக்சக்களின் ஆட்சிக்கு எதிராகக் கூப்பாடு போடத் தொடங்கியிருக்கின்றார்கள். ராஜபக்சக்களின் ஆட்சியில் தமிழ் மக்களுக்கு விமோசனம் கிடைக்கப்போவதில்லைதான். அதேபோலத்தான் பிக்குகளின் தாளத்துக்கு ஆடுவதாலும் தமிழர்களுக்கு ஒரு சதமும் பலனில்லை. இலங்கையின் ஆட்சியாளர்களைத் தீர்மானிப்பதிலும், ஆட்சி எப்படி நடத்தப்படவேண்டும் என்பதை முடிவெடுக்கும் சக்தியாக இருப்பதிலும் செல்வாக்குச் செலுத்தும் பிக்குகள் அவற்றிலிருந்து ஒதுக்கப்படும்போது ஓட்டநறுக்கப்படும்போதே, சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் பிடியிலிருந்து ஆட்சியாளர்கள் விடுதலையாகும்போதே தமிழர்களின் விடுதலை சாத்தியம்.

ராஜபக்சக்களை ஆட்சியில் இருந்து அகற்றத்தான் வேண்டும். ஆனால் அதைவிடவும் முக்கியமாக தேரர்களின் மனதில் உள்ள இலங்கை, தனியே பௌத்த – சிங்கள நாடு என்ற எண்ணமும் மாற வேண்டும். அவ்வாறு மாறாவிட்டால் எந்த அரசாங்கம் வந்தாலும் இதே புதிய மொந்தையில் பழைய கள்ளின் கதைதான்.




### சந்தர்ப்பம் கிட்டுமாயின்
# எரிபொருள் விலையை குறைக்கத் தயங்கோம்!

**கொழும்பு,ஜூன் 30**



**எரிபொருள்களின் விலையைக் குறைப்பதற்கான சூழ்நிலை உருவாகும் பட்சத்தில் அதற்கான முதல் சந்தர்ப்பத்திலேயே நிச்சயம் விலை குறைப்பு இடம்பெறும். என்று அமைச்சரவைப் பேச்சாளரும்,அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது. இதன்போது பஸில் ராஜபக்ச நாடாளுமன்றம் வந்த பிறகு, அதிகரிக்கப்பட்டுள்ள எரிபொருள்களின் விலை குறைக்கப்படும் என்று ஆளுங்கட்சியில் உள்ளவர்களே குறிப்பிடுகின்றனர். அப்படியானால் ஏன் தற்போதே விலை குறைப்பை செய்யமுடியாது, எதற்காக பஸிலின் வருகைக்காக காத்திருக்க வேண்டும் என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; குறித்த விடயம் தொடர்பில் அறிவிப்பு விடுத்தவர்களிடம் கேட்பதே பொருத்தமானதாக இருக்கும். பஸில் ராஜபக்ச வருகின்றாரா, பிரிதொரு நபர் வருகின்றாரா என்பதைவிடவும் எரிபொருள் விவகாரம் உணர்வுபூர்வமான விடயமாகும். எனவே, விலை குறைப்பை செய்வதற்கான சூழ்நிலை உருவாகும்பட்சத்தில் முதல் சந்தர்ப்பத்திலேயே அதனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் சந்தேகம்கொள்ள வேண்டிய அவசியமில்லை - என்றார். (ஐ-44)

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இலங்கை ரத்துச்செய்ய வேண்டும்
### மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

கொழும்பு,ஜூன் 30

இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் ரத்துச்செய்யப்பட வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவிக்கையில்,

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதான 16 பேரை இலங்கை அரசு அண்மையில் விடுதலைசெய்தமை வரவேற்கப்பட வேண்டியது.

எவ்வாறெனினும் இந்த எதேச்சதிகார பயங்கரவாதத் தடைச்சட்டத்தை உடன் ரத்துச்செய்ய வேண்டியதன் அவசியம், இந்த விடுதலையின் மூலம் குறைவடையவில்லை. இலங்கை அரசு சிலருக்கு பொதுமன்னிப்பு வழங்கியபோதிலும், அது தெரிவுசெய்யப்பட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது - என்றார். (ஒ.4)

### தென்மராட்சி பிரதேசத்தில்
# தொலைக்கல்வி நடவடிக்கைகளுக்கு 7 கற்றல் மத்திய நிலையங்கள் தெரிவு

தென்மராட்சி பிரதேசத்தில் தொலைக்கல்வி நடவடிக்கைகளுக்காக இணைய வசதிகள் இல்லாத மாணவர்களுக்கு பிரதேச கற்றல் மத்திய நிலையங்கள் 7 தெரிவுசெய்யப்பட்டு நேற்றுமுன்தினம் தொடக்கம் கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி, மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, கச்சாய் மகா வித்தியாலயம், மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம், வரணி மத்திய கல்லூரி மற்றும் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகள் கற்றல் மத்திய நிலையங்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. (ஐ-159)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

6ஆம் மாத நினைவஞ்சலி

தோற்றம் 18 - 11 - 1971

மறைவு 30 - 12 - 2020



அமரர் வை. சிவஜோதி

(நிர்வாக இயக்குநர், Little Aid நிறுவனம், கிளிநொச்சி)

அருமை நண்பா..........
அறவழி நின்ற சமூகப் பணியாளனே........
எங்கள் சிவஜோதி,
இளமைப் பருவத்தில் செழிப்புடனே வாழும் காலத்தில்
இறைவன் அழைத்திட சிவனடியில் சேர்ந்து விட்டாய்.
எம்மை விட்டு பிரிந்து ஆறு மாதங்கள் கடந்தாலும்
நட்போடு தோள் கொடுத்த உன் நினைவுகள்
எம் மனத்திரையில் ஆழமாய் பதிந்து நிற்கிறது.
காலத்தால் அழியாத உன் நினைவுகளால்
எம் கண்களில் நீர் மல்க கனத்த இதயத்துடன்
உன்னை எம் கண்ணீர் பூக்களால் அர்ச்சிக்கின்றோம்.
உனது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

Faculty of Engineering Technology (92 - 95).
The Open University of Sri Lanka,
Nawala, Nugegoda.

நண்பர்கள்

# பசளைப் பிரச்சினைக்கு தீர்வை வழங்க முடியாது

## மன்னிப்புக்கோரினார் அமைச்சர்

கொழும்பு,ஜூன் 30
விவசாயிகளுக்கான பசளைப் பிரச்சினைகள் தொடர்பில், அமைச்சரவையில் மூன்று முறை கலந்துரையாடினோம். எனினும் எமக்கு தீர்வை வழங்க முடியாது என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
உண்மையில் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து நாங்கள் கவலையடைகின்றோம். விவசாய மக்கள் வாழும் பிரதேசத்தைச் சேர்ந்தவன் என்ற வகையில் நான் விவசாயிகளிடம் மன்னிப்புக் கோருகிறேன்.
இந்தப் போகத்தில் சிலருக்கு தமது உற்பத்தியை அறுவடைசெய்ய முடியவில்லை. இரசாயனப் பசளை இறக்குமதியை நிறுத்த ஜனாதிபதி எடுத்த தீர்மானத்தில் அடிப்படை நோக்கம் இருந்தது.
பெரும்போகத்தில் பயிர்ச்செய்கையை வெற்றிகரமாக முன்னெடுக்கலாம் என்ற எண்ணத்தில் ஜனாதிபதி இதனைச் செய்தார்.
சிறுபோகத்துக்கு தேவையான பசளை இருப்பதாக எமது அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டது. எனினும் துரதிஷ்டவசமாக அதனை சில பிரதேசங்களுக்கு வழங்க முடியவில்லை. இது குறித்து மிகவும் கவலையடைகின்றேன் - என்றார். (ஒ,4)



# பஸிலின் நாடாளுமன்ற வருகை இன்னும் தீர்மானிக்கப்படவில்லை

## கெஹலிய தெரிவிப்பு



**கொழும்பு,ஜூன் 30**
**பஸில் ராஜபக்ச நாடாளுமன்றம் வருவது தொடர்பில் கட்சி மட்டத்தில் இன்னும் தீர்மானம் எடுக்கப்படவில்லை. உறுதியான தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னரே அது தொடர்பில் அறிவிக்கப்படும். அமைச்சரவை மறுசீரமைப்பு தொடர்பில் ஜனாதிபதியே தீர்மானம் எடுப்பார் என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் நடைபெற்றது. அதில் சமகால அரசியல் நிலைவரம் உட்படபல விடயங்கள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்விக்கனைகளைத் தொடுத்தனர்.
எனினும், பஸில் ராஜபக்ச மற்றும் அமைச்சரவை மறுசீரமைப்பு தொடர்பில் எழுப்பட்ட கேள்விகளுக்கு அமைச்சர் நேரடியாக பதிலளிக்கவில்லை.
பஸில் ராஜபக்ச எப்போது நாடாளுமன்றம் வருவார்?
என்ன பதவியை வகிப்பார் என்பது கட்சி உள்ளக விவகாரம். தற்போது பேச்சுகள் இடம்பெறுகின்றன. கட்சி தீர்மானம் எடுத்த பின்னரே அது தொடர்பில் அறிவிக்கப்படும் என்று பதிலளித்தார்.
அதேவேளை, பஸில் ராஜபக்ச பொருளாதார அபிவிருத்தி அமைச்சையும், நிதி இராஜாங்க அமைச்சு பதவியையும் வகிக்கவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது. எனவே, இதனை கட்சி உள்ளக விடயமாக மட்டும் கருத முடியாது. அமைச்சரவை மறுசீரமைப்பு எப்போது இடம்பெறும், இது பற்றி உங்களுக்கு தெரியப்படுத்தப்படவில்லையா என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு,
தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னரே அறிவிப்பு விடுக்கப்படும். ஊகத்தின் அடிப்படையில் பதிலளிக்க முடியாது. ஊகத்தின் அடிப்படையில் வெளியாகும் தகவல்கள் தொடர்பில் கேள்விகளை எழுப்புவதும் தவறு.
அமைச்சரவை மறுசீரமைப்பு தொடர்பில் ஜனாதிபதியே தீர்மானிப்பார். அமைச்சரவை குறித்து முடிவெடுக்கும் அதிகாரம் அவருக்கே உள்ளது என்றும் தெரிவித்தார். (ஒ,4,44)

# அசேல சம்பத்தின் பிள்ளைகளுக்கு சஜித்தால் உதவி

கொழும்பு,ஜூன் 30
சமூக ஆர்வலரும், நுகர்வோர் உரிமைகள் தொடர்பான செயற்பாட்டாளருமான அசேல சம்பத்தின் பிள்ளைகளுக்கு, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவால் கற்றலுக்கான உதவிகள் வழங்கப்பட்டன.
'சத்காரய' நடமாடும் சேவைத் திட்டத்தின் கீழ், மடிக்கணினி மற்றும் உயர் கல்விக்கான புலமைப்பரிசில் ஆகியவை வழங்கப்பட்டன. வெற்றிகரமான கல்வியைத் தொடர அசேல சம்பத்தின் பிள்ளைகளுக்கு அவர் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.
இவர் அண்மையில் கடத்தப்பட்டு, அது பின்னர் கைதாக அறிவிக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ,4)



நாவற்குழி சித்திர வேலாயுதர் ஆலயத்தில் குடமுழுக்கு தினத்தை முன்னிட்டு நேற்று செவ்வாய்க்கிழமை 108 சங்காபிசேகத்துடன் சிறப்பு பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. (ஐ- 159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிகுறியற்ற தொற்றாளர்களுக்கு அவர்களின் வீடுகளிலேயே சிகிச்சை

**கொழும்பு,ஜூன் 30**

**எவ்வித அறிகுறிகளும் அற்ற கொரோனாத் தொற்றாளர்களை, அவர்களின் வீடுகளிலேயே தங்க வைத்து சிகிச்சை யளிக்கும் புதிய திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**



இந்தத் திட்டம் பிராந்திய சுகாதார அலுவலரின் மேற்பார்வையில் முன்னெடுக்கப்படும். அதேவேளை மருத்துவக் கவனிப்பு அதிகம் தேவைப்படுபவர்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்படுவர்.
அறிகுறியற்ற தொற்றாளர்கள் மற்றும் சிறிய அறிகுறிகளுடையவர்கள் வீடுகளின் சுற்றியுள்ள பகுதிகளின் அடிப்படையில் வீடுகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற அனுமதிக்கப்படுவர்.
கொரோனா புதிய வைரஸ், மாறுபாடுகளுடன் பரவி வருவதால் மருத்துவமனைகள் மற்றும் சிகிச்சை மையங்களில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.
குறிப்பாக மேற்கு மாகாணத்தில் தினமும் அதிக எண்ணிக்கையிலான தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவதால் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அதனால் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் தீவிரமான நோயாளிகளை மருத்துவமனையில் சேர்ப்பதில் தாமதம் ஏற்படுவதால், வீடுகளில் இறப்புக்கள் நிகழ்கின்றன.
எனவே மருத்துவ பயிற்சியாளர்கள் தினசரி தொலைபேசி மூலம் வீடுகளில் தங்கியுள்ள நோயாளிகளை தொடர்பு கொள்ளக் கூடிய பொறிமுறையும் ஏற்படுத்தப்படும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஓ.4)




# கொழும்பு, கம்பஹா முடக்கம்

கொழும்பு.ஜூன் 30
கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் மேலும் இரண்டு பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.
கொழும்பில் கொலன்னாவ பொலிஸ் பகுதியில் சன்ஹிந்த செவன தொடர் மாடிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகள் மற்றும் கம்பஹாவில் களனி பொலிஸ் பகுதியில் கல்பொரளை 100 ஆம் இலக்க தோட்டம் தவிர்ந்த ஏனைய பகுதிகள் நேற்றுக் காலை 6 மணி முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.
அதேவேளை கம்பஹா, நுவரெலியா, காலி, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் தனிமைப்படுத்தப்பட்ட 11 பகுதிகள் நேற்றுக் காலை 6 மணி முதல் விடுவிக்கப்பட்டுள்ளன. (ஓ.4)

# அடிப்படை வசதிகளை விரைந்து உருவாக்குக

### இந்திராபுரம் மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 30
கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி, இந்திராபுரம் கிராமத்தில் மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகள் முழுமையாக உருவாக்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;
இந்திராபுரத்தில் 100க்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ள நிலையில் தற்காலிக வீடுகள் வழங்கப்பட்ட குடும்பங்களுக்கு மலசலகூடங்கள் வழங்கப்படவில்லை. மலசலகூடங்கள் வழங்கப்பட்ட குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் வழங்கப்படவில்லை. மீள் குடியேற்றம் செய்யப்பட்ட குடும்பங்களுக்கு உடனடியாகவே மலசலகூடங்களும் தற்காலிக வீடுகளும் வழங்கப்படும் நிலையில் இந்திராபுரம் கிராமத்தில் அடிப்படை வசதிகள் விரைவாக உருவாக்கப்படவில்லை. இதனால் இந்திராபுரத்தில் குடியேறி உள்ள நாம் அடிப்படை வசதிகளின்றி வாழ்கின்றோம். இதேவேளை இந்திராபுரத்தில் முழுமையாக மிதிவெடிகள் அகற்றப்பட்டு முழுமையான மீள் குடியேற்றம் இடம் பெற வேண்டும் என தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம். மிதிவெடி அகற்றி மீள் குடியேற வேண்டிய குடும்பங்கள் தற்போதும் உறவினர்கள் வீடுகளிலும் வாடகை வீடுகளிலும் தொடர்ச்சியாக நீண்டகாலமாகத் தங்கி உள்ளனர். எனவே இந்திராபுரத்தின் மீள்குடியேற்றத்தை முழுமையாக விரைவுபடுத்துமாறும் கேட்டுக்கொள்கின்றோம்- என்றனர். (ப-13)




# எமது அழைப்புக்களை பஸில் நிராகரிக்க முடியாது

### சாகர காரியவசம் தெரிவிப்பு

கொழும்பு.ஜூன் 30
நாடாளுமன்றுக்கு வருகைதருமாறு பஸில் ராஜபக்சவுக்கு, நாம் விடுக்கும் அழைப்பை, அவரால் நிராகரிக்க முடியாது என்று கட்சியின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.
சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், பஸில் ராஜபக்ச தான் இந்தக் கட்சியின் நிறுவுநர். கட்சி உருவான நான்கரை ஆண்டுகளில், அந்தக் கட்சியில் இருந்து ஜனாதிபதி ஒருவரையும், அரசு ஒன்றையும் உருவாக்குவதற்கு மிகப்பெரிய பங்கைக் கொண்டிருந்த ஒரு சிறந்த நபர் அவர்.
அது மட்டுமல்லாமல், நமது முந்தைய அரசுக்கு சுமார் 7 வீத பொருளாதார வளர்ச்சி விகிதத்தை அடைய உதவியதும் அவரே.
அத்தகைய நபரை நாடாளுமன்றுக்கு அழைத்து வர சிறப்பு பிரசாரத்தை மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை.
இது போன்ற ஒரு சூழ்நிலையில் அவரைப் போன்ற ஒருவர் வந்து குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தால், அது நாட்டுக்கு முக்கியமானதாக இருக்கும் என்பது எமது எதிர்பார்ப்பு. எமது கட்சி மற்றும் மக்களுக்கும் அவர் மீது நம்பிக்கை உள்ளது- என்றார். (ஓ.4)



# 455 பேர் கைது

கொழும்பு.ஜூன் 30
கொரோனாத் தொற்றுக் கால தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறினர் என்ற குற்றச்சாட்டுக்களில் நேற்றும் 455 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
அதற்கமைவாக இதே குற்றச்சாட்டுக்களில் 45 ஆயிரத்து 99 பேர் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4)

# 6 நாடுகளுக்கு இலங்கை தடை

கொழும்பு.ஜூன் 30
மத்திய கிழக்கின் 6 நாடுகளிலிருந்து, இலங்கைக்கு வரும் பயணிகளுக்கு தடை விதிக்கப்படவுள்ளது. இந்தக் கட்டுப்பாடுகள் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல், 13 ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
அதற்கமைவாக சவூதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கட்டார், குவைத், பஹ்ரைன் மற்றும் ஓமான் ஆகிய நாடுகளிருந்து வரும் பயணிகள் இலங்கைக்குள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
அத்துடன் ஆபிரிக்கக் கண்டத்தின் 8 நாடுகளில் இருந்து வரும் பயணிகளும், இலங்கைக்குள் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. (ஓ.4)

# கட்டுப்பாடுகளை மீறி பயணித்த தனியார் பஸ்

### *31 பயணிகள் கைது*

கொழும்பு.ஜூன் 30
தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறி ஏறாவூரிலிருந்து, கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸொன்று, கம்பஹா, மிரிஸ்வத்த பகுதியில் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டது.
தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துநர் உட்பட 31 பயணிகள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்சக்கள் ஆட்சியின் அலங்கோலத்தை கொரோனா என்ற திரையால் மூடமுடியாது

## மனோ கணேசன் எம்.பி. தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன் 30**

**விலைவாசி உயர்வுக்கு கொரோனா எனக் காரணம் காட்டும் ஜனாதிபதியால், தனது 19 மாத ஆட்சியின் முழு அலங்கோலத்தையும் கொவிட், என்ற திரையைப் போட்டு மூட முடியாது என்று தமிழ் முற்போக்கு கூட்டணி யின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரி விக்கையில்;

ஜனாதிபதி கோத்தாபயவை நினைத்து, எல்லே குணவன்ச தேரர் இன்று கண் ணீர் விட்டு அழுகின்றார். இன்னொ ருவரான முருத்தெட்டுவே தேரர் திட்டித் தீர்க்கின்றார். உண்மையில் அழ வேண்டியது அவர்கள் அல்ல. நாங் களே. ஆனால், இவர்கள் அழுது திட்டுகின்றார்கள். இவர்கள்தான் இந்த ராஜபக்ச அரசை உருவாக்கிய பௌத்த தேரர்கள். இவர்களின் அழு கையும், திட்டுமே இந்த அரசின் இலட் சணத்தை படம் பிடித்துக்காட்டுகிறது. இன்று இந்நாட்டில் ஆடைத் தொழில் ஏற்றுமதியின் எதிர்காலம் சந்தேகத் துக்கு உரியதாக இருக்கின்றது. இவர் களின் மனித உரிமை மீறல் காரண மாக ஜி.எஸ்.பி. சலுகை இல்லாமல் ஆகப் போகின்றது. இதனால், இந்த ஏற்றுமதி வருமானம் நின்று போக லாம். சுற்றுலாத்துறை முழுமையாக நின்று போய்விட்டது. மத்திய கிழக்கு பணியாளர்களின் வாழ்வும், வருமா னமும் இன்று கேள்விக்கு உரியதாக மாறியுள்ளது. இந்நிலையில் இன்றும் அன்றும், என்றும் இலங்கைக்கு வெளிநாட்டு வருமானத்தைப் பெற றுத்தருவது தேயிலை ஏற்றுமதியே. இதனாலேயே ஜனாதிபதி நாட்டு மக் களுக்கான தனது உரையில், 'சிலோன் டீ' பற்றி பேசினார். ஆனால் 'சிலோன் டீ' யின் பின்னால் உள்ள உழைப்பாளிகளின் உயிர் வாழ்வு அவருக்கு மறந்துவிட்டது. இலங்கை சிலோன் தேயிலை தொடர்பாக பேசிய ஜனாதிபதி, இலங்கைத் தேயிலை யின் பின்புலத்தில் இருக்கும் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பில் பேச மறந்துள்ளார். அது தொடர்பில் ஜனா திபதி அவர்களுக்கு நாங்கள் ஞாபகப் படுத்த விரும்புகிறோம். எப்பொழுதும் போலவே இன்றும் நாட்டில் மிஞ்சியுள் ளது தேயிலை உள்ளிட்ட தோட்டப் பயிர்கள் ஏற்றுமதித் தொழில்துறை மட்டுமே. இந்தத் தொழில் துறையில் ஈடுபட்டுள்ள தோட்டத் தொழிலாளர்க ளின் தற்போதுள்ள நிலைமை தொடர் பில் ஒரு கணமேனும் நினைத்துப் பார்த்தீர்களா என அவரிடம் நான் வினவ விரும்புகின்றேன்.

தொழிலாளர்களுக்கு 1000 ரூபா பெற்றுத்தருவதாக புத்தகத்தில் குறிப் பிடப்பட்டுள்ளது. எனினும் அவர்க ளுக்கு எத்தனை நாள்களுக்கு அந் தச் சம்பளம் வழங்கப்படுகிறது? நாள் ஒன்றுக்கு ஆயிரம் ரூபா வீதம் 30 நாள்களுக்கு முப்பதாயிரம் ரூபா கிடைக்கின்றது என்று ஜனாதிபதி நினைக்கி றாரா? அவ்வாறு இல்லை. ஏழு அல்லது எட்டு நாள்களுக்கான சம்பளமே அவர்களுக்குக் கிடைக்கின் றது.

இதேபோல் நடுக்கடலில் மிதந்த இர சாயன திரவம் கொண்ட தீப்பற்றிய கப்பலால் பாணந்துறை முதல் நீர் கொழும்பு வரை மீனவர்களும் நடுத் தெருவுக்கு வந்துகொண்டுள்ளார்கள். அது மன்னார் வரை போய் விட்டது. அவர்கள் வாழ்க்கை உடைகிறது. நம் கடலின் மீனவச் செல்வங்கள் பேரழி வைச் சந்திக்கின்றன. அதேபோல் இலங்கை மக்களின் சாப்பாட்டு மேசைகளில் இன்று மீன் உணவு இல்லை. மீன் வாங்க சமைக்க எல் லோரும் பயப்படுகிறார்கள். மீன் உணவும் இல்லை. மீனவர் வாழ்வும் இல்லை - என்றார். (ப)



# 140 குடும்பங்களுக்கு உலருணவுப்பொதிகள்

கொடிகாமம்,ஜூன் 30

பயணத்தடை காரணமாக பாதிக்கப்பட்ட நாவற்குழி ஐயனார் கோவிலடி மற்றும் புதிய குடியேற்றம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 140 குடும்பங்களுக்கு உலருணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

சட்டத்தரணி காண்டீபனின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் இ. யோகேஸ்வரன் பயனாளிகளது வீடுகளுக்கு நேரடியாக சென்றுஉலருணவுப் பொதிகளை வழங்கினார். (ஐ-159)



# 100 குடும்பங்களுக்கு உலருணவுப்பொதிகள்

கிளிநொச்சி,ஜூன் 30

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி கல்லாறு கிராமத்தைச் சேர்ந்த 100 குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபா பெறு மதியான உலருணவுப் பொதிகள் வழங்கப் பட்டன.

இதற்கான நிதியுதவியை நளின் இன்போ மேசன் ரெக்னொலஜி நிறுவனத்தின் உரிமையாளர் ரஞ்ஜீவ் வழங்கியிருந்தார். கல்லாறு கிராம அலுவலர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கண்டாவளை பிரதேச செயலர் த.பிருந்தாகரன், 572 படைப்பிரி வின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் நிசாந்த, நிறுவன உரிமையாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ-6)

# ரஞ்சன் ராமநாயக்கவுக்கு தொடர்ந்தும் சிகிச்சை

கொழும்பு,ஜூன் 30

கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள, கம்பஹா மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு, காலி கராப்பிட்டிய மருத்துவமனையில் தொடர் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

முழங்காலில் ஏற்பட்டுள்ள உபாதைக்கு அவர் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு தொடர்பான இரா ஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்துள்ளார். சிறைக்காவலர்களின் பொறுப்பில் அவருக்கு சிகிச்சை ய ளிக்கப்படுகின்றது. நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக் காக ரஞ்சன் ராமநாயக்கவுக்கு, கடந்த ஜனவரி மாதம் 12 ஆம் திகதி 4 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை உயர் நீதிமன்றால் விதிக்கப்பட்டது. (ஒ.4)

# குருதிக்கொடைமுகாம்

கொடிகாமம்,ஜூன் 30

குருதிக்கொடை முகாம் எதிர்வரும் 3 ஆம் திகதி சனிக் கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல் லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் நாடாளுமன்ற உறுப் பினர்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் குருதிக் கொடைமுகாம் நடைபெறவுள்ளது. (ஐ-159)

# மாதிரிக் கிராமங்களில் வாழ்கின்ற மக்களுக்கு வயல் காணி வழங்குக

## துணுக்காய் சபை உறுப்பினர் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூன் 30

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாதி ரிக் கிராமங்களில் வாழ்கின்ற குடும்பங்களுக்கு வயல் நிலங் கள் வழங்கப்படவேண்டும் என்று துணுக்காய் பிரதேச சபை உறுப் பினர் ச.சுயன்சன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

2010 ஆம் ஆண்டுக்குப் பின் னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் பல மாதிரிக் கிராமங்கள் உரு வாக்கப்பட்டன. வீட்டுடன் அரை ஏக்கர் காணி மட்டும் வழங்கப்பட் டன. இக் குடும்பங்கள் விவசாய முயற்சிகளில் ஈடுபடுவதற்குத் தயாராக இருந்தபோதிலும் வயல் நிலம் இல்லாததன் காரணமாக உற்பத்தியில் ஈடுபட முடிய வில்லை. தற்போது கொரோனா முடக்கம் காரணமாக மாதிரிக் கிராமங்களில் வாழ்கின்ற குடும் பங்கள் கடும் வறுமைக்குள் சென்றுள்ளன. இக்குடும்பங்க ளுக்கு வயல் நிலம் குறைந்தது தலா ஒரு ஏக்கராவது வழங்கும் போது விவசாய முயற்சியில் இக் குடும்பங்கள் ஈடுபடும். தற்போது இக் குடும்பங்கள் வாழ்வாதார ரீதியாக கடுமையாக பாதிக்கப்பட் டுள்ளன. துணுக்காய் பிர தேச செயலர் பிரிவில், அனிஞ்சியன் குளம், உயிலங்குளம், துணுக் காய், நந்தகுமார் மாதிரிக் கிரா மம், மல்லாவி மற்றும் மங்கை நகர் ஆகிய மாதிரிக் கிராமங்க ளில் வாழ்கின்ற 350 வரையான குடும்பங்கள் வறுமையில் வாடு கின்றன. உயிலங்குளம் போன்ற மாதிரிக் கிராமங்கள் போக்குவ ரத்து, சுகாதாரம், குடிதண்ணீர் நெருக்கடி என்பவற்றால் பாதிக் கப்பட்டுள்ளன. மாதிரிக் கிராமங் களில் வாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவ தற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ப-13)


# உயிருடன் இருப்பவருக்கு கண்ணீர் அஞ்சலி நோட்டீஸ்

வவுனியா, ஜன் 30

வவுனியா வெளிக்குளம் பகுதியில் வசித்துவரும் சமூக செயற்பாட்டாளருக்கு எதிராக கண்ணீர் அஞ்சலி நோட் டீஸ் ஒட்டப்பட்டுள்ளது. அவரது வீடு அமைந்துள்ள பகுதி யெங்கும் அண்மையில் இந்த நோட்டீஸ் ஒட்டப்பட்டது. இது தொடர்பில் வவுனியா சிறுகுற்றப்பிரிவில் முறைப் பாட்டைப் பதிவுசெய்த சமூக செயற்பாட்டாளர். முறைப் பாட்டில் சந்தேகத்துக்கிடமான ஒருவருடைய பெயரையும் பதிவுசெய்திருந்தார். விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் நேற்றுமுன்தினம் இரு தரப்பினரையும் அழைத்து, சமாதானப்படுத்தி சமரசம் செய்து அனுப்பி வைத்தனர். (ப-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறுபட்ட வைரஸ் தொற்றாளர்கள்: மாதிரிகள் மரபணுப் பரிசோதனை



**கொழும்பு,ஜூன் 30**

**மாறுபட்ட வைரஸ் தொற்றாளர்கள் மூவரிடம் பெற்றப்பட்ட மாதிரிகள் மரபணுப்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் பட்டுவந்துட்டுவ தெரிவித்துள்ளார்.**

கொழும்பு தெமட்டகொடப் பிரதேசத்தில் டெல்டா வைரஸ் தொற்றுடன் இனங்காணப்பட்ட தொற்றாளர்களைத் தொடர்ந்து, இது வரை வேறு எவருக்கும் டெல்டா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை.

எனினும் மேலும் 3 தொற்றாளர்களுக்கு மாறுபட்ட வைரஸ்தொற்று ஏற்பட்டுள்ளது. அவர்களிடம் பெறப்பட்டுள்ள மாதிரிகள் மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் முடிவுகள் கிடைக்கப்பெறும் வரை, குறித்த தொற்றாளர்கள் மிகுந்த அவதானத்துடன், மருத்துவக் கண்காணிப்பில் உள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ,4)



# துமிந்தவின் விடுதலையில் எந்த நியாயமும் கிடையாது

## சாணக்கியன் எம்.பி தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 30

தன்னுடைய இனத்தின் விடுதலைக்காகப் போராடியவர்கள் இன்னும் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும். ஆனால் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைக் கொலை செய்து குற்றவாளி எனத் தீர்ப்பு வழங்கப்பட்டவர் ஐந்து வருட சிறைத்தண்டனை அனுபவித்தது போதுமானது என்றால் இதில் என்ன நியாயம் இருக்கின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வியெழுப்பினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

தற்போது இடம்பெற்ற அரசியல் கைதிகள் சிலரின் விடுதலை வரவேற்கத்தக்க ஒரு நல்ல விடயம். பதினாறு அரசியல் கைதிகளை விடுவித்தமை வரவேற்கத்தக்க விடயமாக இருந்தாலும் ஏனையவர்ககளையும் விடுவிக்கும் வரையில் எங்கள் அழுத்தங்களைக் குறைக்க மாட்டோம். நாங்கள் தொடர்ச்சியாக எங்கள் அழுத்தத்தைக் கொடுத்துக் கொண்டே இருப்போம். அரசியல் கைதிகள் விடுதலைசெய்யப்படப் போகிறார்கள் என்று சொன்னவுடன் எத்தனையோ தாய்மார், மனைவி, குழந்தைகள் மற்றும் சகோதரங்கள் எதிர்பார்ப்புடன் இருந்தார்கள். ஆனால் துரதிஷ்டவசமாக பதினாறு பேர் மாத்திரம் தான் வெளியில் வந்திருக்கின்றார்கள்.

வடக்கு கிழக்கிலே அரசியல் கைதிகளின் விடுதலையுடன் சேர்த்து முகநூல்களில் பதிவுகளை மேற்கொண்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டிருக்கும் இளைஞர்களின் விடுதலைக்காவும் குரல் கொடுக்க வேண்டும்.

முகநூலில் பதிவிட்ட குற்றச்சாட்டுக்காக சிறையில் ஒரு வருடம் இருப்பதென்பது ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது. துமிந்த சில்வாவின் விடுதலையை நியாயப்படுத்தும் முகமாக அவர்களின் கீழ் இயங்கும் சில ஊடகங்கள் செயற்படுகின்றன. அவ்வாறான ஊடகம் தற்போதைய ஜனாதிபதியை ஜனாதிபதியாக்குவதற்கும் தற்போதைய அரசை ஆட்சிக்குக் கொண்டுவருவதற்கும் கடுமையாகப் பாடுபட்ட ஒரு ஊடகம்.

நாட்டிலே மக்களின் பிரச்சினைகள் எத்தனையோ இருக்க, ஒரு நடிகையைக் கைதுசெய்தது தான் பெரிய பிரச்சினை போன்று வெளிப்படுத்தி அரசுக்கு பெரும் அழுத்தங்களைக் கொடுக்கும் முகமாகச் செயற்பட்டது. அந்த நேரத்திலே எனக்கு சந்தேகம் ஏற்பட்டது துமிந்த சில்வாவை விடுதலை செய்வதற்கான ஒரு நாடகமாக இது இருக்கலாம் என்று. அது போலவே நடந்து விட்டது- என்றார். (ப-150)

# குடிதண்ணீர் கிணறு துப்புரவு

முல்லைத்தீவு,ஜூன் 30

முல்லைத்தீவு பழையமுறிகண்டி கிராமத்தில் உள்ள குடிதண்ணீர் பொதுக்கிணறு ஒன்று துணுக்காய் பிரதேச சபையால் இறைத்து துப்புரவுசெய்யப்பட்டது.

பழையமுறிகண்டி கிராமத்தில் 40 குடும்பங்களுக்கு மேல் வசித்துவரும் நிலையில் குடிதண்ணீருக்கு பயன்படுத்தும் பொதுக்கிணறு ஒன்று துப்பரவுசெய்யப்படாமல் நீண்டகாலமாக காணப்பட்டது.

குறித்த கிணற்றை இறைத்து துப்புரவுசெய்து தரும்படி துணுக்காய் பிரதேச சபையிடம் பழையமுறிகண்டி கிராம மக்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் ச.சுயன்சனின் முயற்சியால் குறித்த கிணறு கடந்த ஞாயிற்றுக்கிழமை துப்புரவுசெய்யப்பட்டது. (ஐ-13)

# ஒரே குடும்பத்தில் மூவர் உயிரிழப்பு

## விசாரணைக்கு பணிப்பு

கொழும்பு,ஜூன் 30

கொரோனாத் தொற்றால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் மகன் ஆகியோர் உயிரிழந்தமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு, சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.


பேராதனை யட்டிநுவர இலுக்தென்ன முருத்தலாவ பிரதேசத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்தனர் என்று வெளியாகியுள்ள செய்திகள் தொடர்பில், சுகாதார அமைச்சர் அவதானம் செலுத்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் துரித விசாரணைகளை முன்னெடுக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தனவுக்கு, சுகாதார அமைச்சரால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான துரதிஷ்டவசமான சம்பவங்கள் சுகாதார அமைச்சால் ஆழமாக அவதானத்தில் கொள்ளப்பட வேண்டியவையாகும் என்று சுட்டிக்காட்டிய அமைச்சர், இதுபோன்ற சம்பவங்கள் மீண்டுமொரு நடக்காமலிருக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய இது தொடர்பில் மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி ஆகியோரிடம் அறிக்கையைப் பெற்றுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.


71 வயதுடைய சிறிபால ராஜபக்ச என்பவர் கடந்த 2 ஆம் திகதி கொரோனாத் தொற்றால் உயிரிழந்தார். அதனையடுத்து அவரின் மனைவியான 68 வயதுடைய சந்ரா ராஜபக்ச கடந்த 17 ஆம் திகதி உயிரிழந்தார். இந்த நிலையில் கடந்த 23 ஆம் திகதி இவர்களின் மகனான 39 வயதுடைய தம்மிக ராஜபக்சவும் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,4)





திருகோணமலை குச்சவெளி கல்லராவ கடற்கரையில் நேற்று இறந்த நிலையில் சுறா ஒன்று கரை ஒதுங்கியுள்ளது. குறித்த சுறா 15 அடி நீளமுடையது என்று தெரிவிக்கப்படுகின்றது. குறித்த கடற்கரையில் அண்மையில் 10க்கும் மேற்பட்ட சுறாக்கள் உயிருடன் கரையோதுங்கியமை குறிப்பி டத்தக்கது. (ப)

# தடுப்பூசியை துணிந்து பெற்றுக்கொள்ளுங்கள்



## சுகாதாரப் பரிசோதகர் தெரிவிப்பு

கொடிகாமம், ஜூன் 30

தடுப்பூசி தொடர்பாக தேவையற்ற கட்டுக்கதைகளை நம்பத் தேவையில்லை ஏற்கனவே முதலாவது டோஸ் பெற்றவர்களில் எவருக்குமே தடுப்பூசி ஏற்றலின் பின்னரான பக்க விளைவுகள் எவையும் பெரியளவில் பதிவாகவில்லை. ஆகவே துணிந்து வந்து இந்த தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியும் என எழுதுமட்டுவாழ் பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சூ.குணசாந்தன் தெரிவித்தார்

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

தடுப்பூசியானது கொரோனாவிலிருந்து வரக்கூடிய பாதகமான விளைவுகளைத் தவிர்க்க உதவும். எங்களுடைய உயிரைப் பாதுகாக்கும். நாம் தவறாது இந்த தடுப்பூசியை வாய்ப்பு கிடைக்கும்போது ஏற்றிக்கொள்ள வேண்டும். அனைவரும் இந்த தடுப்பூசியை ஏற்றிக் கொள்ள முடியும்.

ஏதாவது தொற்று நோய்கள் இருந்தால் இந்த தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியாது. அதேபோல புற்றுநோய் போன்ற தீவிர நோய் நிலைமைகளுக்கு உள்ளாகி தற்போது சிகிச்சை பெற்றுக் கொண்டு இருப்பவர்களும் இந்த தடுப்பூசியைப் பெற முடியாது. ஏனைய அனைவரும் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும். நீங்கள் உங்கள் பகுதி சுகாதாரப் பரிசோதகரைத் தொடர்புகொண்டு அதற்கேற்ப ஆலோசனைகளைப் பெற்று சமூக மட்டத்தில் இடம்பெறும் தடுப்பூசி ஏற்றும் நிகழ்வில் கலந்து கொண்டு தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியும். தடுப்பூசி ஒன்று தான் தற்போது உருவாகி இருக்கும் இந்த கொரோனா பேராபத்தில் இருந்து எங்களைப் பாதுகாக்கக் கூடியது - என்றார். (ப-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவிஸ் அரசால் மருத்துவ உதவி

## பிரதமரிடம் கையளிப்பு



கொழும்பு.ஜூன் 30

கொரோனாத் தொற்றை வெற்றி கொள்வதற்காக, சுவிஸ் அரசால் இலங்கைக்கு, 4 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டன.

இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் டொமினிக் ஃபர்க்லர், பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் அவற்றைக் கையளித்தார். இந்த நன்கொடைக்காக சுவிட்சர்லாந்து மக்களுக்கு, பிரதமர் நன்றி தெரிவித்தார். இரு நாடுகளுக்கும் இடையே காணப்படும் வலுவான ஒத்துழைப்பைத் தொடர்ச்சியாக பேணுவதன் முக்கியத்துவம் தொடர்பிலும் வலியுறுத்தினார்.

ஒட்சிசன் செறிவு கருவி மற்றும் மரபணுச் சோதனை அமைப்பு உள்ளிட்டவை இந்த மருத்துவ உபகரணத் தொகுதியில் உள்ளடங்குகின்றன.

அதேவேளை இலங்கை சுவிட்சர்லாந்து நாடாளுமன்ற நட்பு சங்கத்தை மீண்டும் செயற்படுத்த வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

சுற்றுலாத்துறையை எதிர்காலத்தில் மிக விரைவில் புத்துயிர் பெறச்செய்யும், தற்போதைய உலக எதிர்பார்ப்பின்படி இலங்கையில் விருந்தோம்பல் துறையின் செயற்பாடுகள் மற்றும் சேவைகளை மேம்படுத்துவதற்கு சுவிட்சர்லாந்து அரசு ஒத்துழைப்பு வழங்கும் என்று தூதுவர் டொமினிக் ஃபர்க்லர் நம்பிக்கை வெளியிட்டார். (ஒ.4)

# பாதுகாப்புக்கோரும் ஷானி அபேசேகர

## பொலிஸ்மா அதிபருக்கு விசேட கடிதம்

**கொழும்பு,ஜூன் 30**

**குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஷானி அபேசேகர, தனது குடும்பத்தின் பாதுகாப்பை உறுதிசெய்யுமாறு கோரி, பொலிஸ் மா அதிபருக்கு விஷேட கடிதம் அனுப்பியுள்ளார்.**

3 பக்கங்களைக் கொண்ட அந்தக் கடிதத்தில், ஷானி அபேசேகர தனக்கும், தனது குடும்பத்தாருக்கும் நிலவும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனது பொலிஸ் சேவையில் நான் நேர்மையாக பல விசாரணைகளை முன்னெடுத்தேன். அதனால் இராணுவத்தினர், கடற்படையினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள், பாதாள உலக குழு உறுப்பினர்கள், பயங்கரவாதக் குழுக்களைச் சேர்ந்தோர் ஆகியோரை நான் கைதுசெய்துள்ளேன். அவர்களுக்கு சாவுத் தண்டனை, ஆயுள் தண்டனை உள்ளிட்டவை கிடைக்கப்பெறவும் எனது விசாரணைகள் காரணமாகின.

நான் கைதுசெய்யப்பட முன்னர் எனக்கு வந்த தொலைபேசி அழைப்பில் எனது குடும்பத்தாரைக் கொலை செய்வோம் என்று மிரட்டினர்.

அது தொடர்பில் எனது மனைவி முறைப்பாடளித்திருந்தார். எனினும் அதற்கு எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. இதற்கு முன்னர் முன்னாள் பொலிஸ்மா அதிபர் என்.கே. இளங்கோனுக்கு, தேசிய உளவுச் சேவை வழங்கிய அறிக்கையில் எனக்கு உயிர் அச்சுறுத்தல் உள்ளது என்று குறிப்பிட்டிருந்தனர். அதனால் எனக்கும், எனது வீட்டுக்கும் மேலதிக அதிரடிப்படை பாதுகாப்பு, முன்னாள் பொலிஸ்மா அதிபர் இளங்கோனினால் வழங்கப்பட்டது. எனினும் நான் சி.ஐ.டி.யிலிருந்து காலிக்கு இடமாற்றப்படும் போது, அந்தப் பாதுகாப்பு பறிக்கப்பட்டது.

கடந்த 10 வருடங்களுக்கு முன்னர், எனக்கு இருந்த உயிர் அச்சுறுத்தலைக் கருத்தில் கொண்டு, இரு துப்பாக்கிகளைப் பயன்படுத்த பாதுகாப்பு அமைச்சின் ஊடாக எழுத்து மூல அனுமதியைப் பெற்றிருந்தேன்.

எனினும் நான் கைதுசெய்யப்பட்டதும் குறித்த துப்பாக்கிகளை எனது மனைவி, பொரளை பொலிஸ் நிலையத்தில் எனது ஆலோசனைக்கு அமைய ஒப்படைத்திருந்தார்.

தற்போது எனது உயிருக்கும், எனது குடும்பத்தாரின் உயிருக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே எனது பதுகாப்புத் தொடர்பில் பாதிக்கப்பட்டோர், சாட்சிகள் பாதுகாப்பு தொடர்பான பொலிஸ் பிரிவு, மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் பிரதம நீதியரசர், பொலிஸ் ஆணைக்குழு, சட்டமா அதிபர் ஆகியோருக்கும் முறைப்பாடளித்துள்ளேன்.

எனவே எனது நிலைமையை நியாயமாக ஆராய்ந்து எனது குடும்பத்தின் பாதுகாப்பை உறுதிசெய்வீர்கள் என்று நம்புகின்றேன் என்றும் அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (4)





# லயன்ஸ் கழகங்களால் மன்னாரில் நலத்திட்டங்கள்

மன்னார்,ஜூன் 30

சர்வதேச லயன்ஸ்கழகங்களின் 306 பி 1 மாவட்ட லயன்ஸ் கழகங்கள் இணைந்து மன்னார் மாவட்டத்தில் பல்வேறு நலத் திட்டங்களை அண்மையில் மேற்கொண்டன.

லயன்ஸ் கழகங்களைச் சேர்ந்த சாவகச்சேரி இந்துக் கல்லூரி 1983 க.பொ.த.சாதாரண தர வகுப்பு மாணவிகளின் நிதிப் பங்களிப்பில் மன்னாரில் வதியும் முல்லைத்தீவு செஞ்சோலையில் வளர்ந்த குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

அத்துடன் அங்குள்ள விளையாட்டுக் கழகங்களுக்கும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ஐ-9)



# வேலையற்ற பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனத்தை வழங்குக

## ஜனாதிபதியிடம் வலியுறுத்து

கொழும்பு,ஜூன் 30

வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச வேலைவாய்ப்பு வழங்கப்பட்டிருந்தாலும், அவர்களுக்கான பயிற்சிக்காலம் முடிவடையவுள்ள நிலையில் இதுவரை நிரந்தர நியமனத்தை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. எனவே அவர்களுக்கு எதிர்வரும் செப்ரெம்பர் 3 ஆம் திகதிக்கு முன்னர் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று ஒன்றிணைந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் மத்திய நிலையம் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் ஒன்றிணைந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் மத்திய நிலையத்தால் ஜனாதிபதி கோத்தபய ராஜபக்சவுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் விவகாரத்தில் கடந்த காலங்களில் ஆட்சியிலிருந்த அரசோ அல்லது தற்போதைய அரசோ முறையான செயற்றிட்டமொன்றைக் கொண்டிருக்கவில்லை.

இதுவரையில் அரச சேவையில் உள்வாங்கப்பட்டிருக்கும் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா கற்றைநெறியைப் பூர்த்திசெய்தவர்களின் எண்ணிக்கை 52 ஆயிரத்து 589 ஆகும். எனினும் நீங்கள் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின் போது 65 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டன என்று குறிப்பிட்டீர்கள். அது முற்றிலும் பொய்யான தகவலாகும். அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட யோசனையின் கீழ் 60 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டது. அதனைப் பூர்த்திசெய்வதற்கு இன்னும் 7 ஆயிரத்து 411 பேருக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். ஏற்கனவே அரச சேவையில் உள்வாங்கப்பட்ட பட்டதாரிகளுக்கான பயிற்சிக்காலம் 2021 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் தற்போது கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களின்படி அவர்களுக்கு நிரந்தர நியமனத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே அந்தப் பட்டதாரிகளை தற்போது பணிபுரியும் நிறுவனங்களிலேயே நிரந்தர நியமனத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். என்றுள்ளது. (4)

# ஒப்பந்தங்களின் இரகசியம் பேணல் பொதுவான இறக்குமதிக் கொள்கை

## சீனத்தூதரம் அறிக்கை

கொழும்பு,ஜூன் 30

கொள்வனவு ஒப்பந்தத்தில் உள்ள விடயங்களை வெளிப்படுத்தாமல் இருப்பதென்பது, உலகளாவிய ரீதியிலுள்ள மருந்தாக்க நிறுவனங்களால் கடைப்பிடிக்கப்படும் பொதுவான இறக்குமதிக் கொள்கை என்று சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கை கொள்வனவுசெய்யவுள்ள சினோவெக்ஸ் தடுப்பூசியின் விலை தொடர்பான தகவல்கள் பகிரங்கப்படுத்தப்படக்கூடாது என்று சீனக் கம்பனியால் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தச் செய்தியை மேற்கோள்காட்டி இலங்கையிலுள்ள சீனத்தூதரகம் அதன் உத்தியோகபூர்வ ருவிற்றரில் குறிப்பிட்டுள்ளதாவது.

சைனோஃபோர்ம், சினோவெக்ஸ், பைஸர் மற்றும் மொடேனா உள்ளிட்ட தடுப்பூசிகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களும், தம்மிடமிருந்து தடுப்பூசியைக் கொள்வனவு செய்வோருடன் மேற்கூறப்பட்டவாறான ஒப்பந்தத்தில் உள்ள விடயங்களை வெளிப்படுத்தாமல் இருக்கும் கொள்கையையே கடைப்பிடிக்கின்றன- என்றுள்ளது. (ஒ.4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மதஸ்தலங்களுக்கு உலருணவுப்பொதி

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள விகாரைகள் மற்றும் ஏனைய மதஸ்தலங்களுக்கு 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுகள் அடங்கிய பொதிகள் விநியோகிக்கப்படவுள்ளன. லங்கா சதொச ஊடாக குறித்த உலர் உணவுகள் கொள்வனவு செய்யப்படும்.

அவற்றை பொதிகளாக்கி, இனங்காணப்பட்ட விகாரைகள் மற்றும் ஏனைய மதஸ்தலங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஓ.4)

# அடுத்த 3 மாதங்களில் எதிர்பாராத தாக்கங்கள்

## மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 30

இலங்கையில் அடுத்த மூன்று மாதங்களில் எதிர்பாராத தாக்கங்கள் ஏற்படும் என்று மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது கொரோனாத் தொற்றுப் பரவல் கட்டுப்பாட்டில் இருப்பது போன்று தரவுகள் வெளியிடப்பட்டாலும், அடுத்த 3 மாதங்களில் இதன் விளைவுகளை எதிர்பார்க்கலாம். கொரோனாத் தொற்று சமூகப் பரவலாக மாற்றமடைந்திருக்கும். குறிப்பாக டெல்டா வைரஸ் தொடர்பில் அதிக கவனம் செலுத்தி, முன்னாயத்த ஏற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (ஓ.4)

# மாறுபட்ட டெல்டா வைரஸால் கடுமையான நோய்த்தாக்கம்

## மருத்துவர் தகவல்



**கொழும்பு, ஜூன் 30**

**மாறுபாடுடைய டெல்டா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கடுமையான நோய்த்தாக்கம் ஏற்படும் என்று வைரஸ் நோய் தொடர்பான விசேட மருத்துவர் ஜூட் ஜயமஹா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடொன்றில் கொரோனா வைரஸ் பரவல் திடீரென அதிகரித்தால், சுட்டாயம் புதிய மாறுபாடுடைய வைரஸ் பரவியுள்ளது என்றே அர்த்தம். தற்போது டெல்டா மாறுபாடுடைய வைரஸ் 89 நாடுகளில் பரவியுள்ளது.

இது மிகவும் வேகமாகப் பரவுவதுடன், முதலாம் இரண்டாம் அலைகளைப் போன்று புதிய அலையாக பரவுவதையும் அவதானிக்க முடிந்துள்ளது. இது கடுமையான நோய்த்தாக்கத்தை ஏற்படுத்தும். எந்த வகையான வைரஸ்களும் பரவினாலும் அவை எச்சில் துளிகளின் ஊடாக மாத்திரமே பரவுகின்றன என்பது இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி மக்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் - என்றார். (ஓ.4)

# ஆபத்தான நாடுகளுடன் இலங்கையும் இணைப்பு

கொழும்பு, ஜூன் 30

உலகப் புகழ்பெற்ற தரப்படுத்தல் நிறுவனமான ஸ்டேட் என்ட் புவர்ஸ் நிறுவனத்தின் தரப்படுத்தலுக்கு அமைவாக, ஆபத்தான நாடுகள் பட்டியலில் இலங்கையும் இணைக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஏற்கனவே CCC+ தரத்தில் இருப்பதுடன் தற்போதைய தரப்படுத்தலுக்கு அமைவாக மேலும் கீழ்நோக்கித் தள்ளப்பட்டுள்ளது.

இந்தத் தரப்படுத்தல் பட்டியலில் பொருளாதார ரீதியில் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்துள்ள நாடுகள் இடம்பெற்றுள்ளன.

இலங்கை பெற்றுக்கொண்ட கடனை திரும்பச் செலுத்த முடியாத நெருக்கடியில் உள்ளது. இதனால் இந்தப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளது. அதேவேளை இந்தத் தரப்படுத்தல் பட்டியலில் ஏனையவை ஆபிரிக்க நாடுகள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-4)

### நிறுவனங்கள் பின்பற்றும்

# சுகாதார வழிகாட்டல்களை ஆராய்வதற்கு சிறப்புக் குழு



கொழும்பு, ஜூன் 30

அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் கொரோனா வைரஸ் தொடர்பான சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்கள் பின்பற்றப்படுகின்றனவா என்பது தொடர்பில் ஆராய்வதற்கு, விசேட பொலிஸ் குழு ஒன்று அமைக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால், கடந்த 20ஆம் திகதி அறிவுறுத்தப்பட்ட தனிமைப்படுத்தல் சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களை இந்த நிறுவனங்கள் பின்பற்றுகின்றனவா என்பது தொடர்பில் பொலிஸார் ஆராய்வர்.

இதற்காக விசேட பொலிஸ் குழு ஒன்று அமைக்கப்படும்.

அதேவேளை, பொதுப்போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களில் சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்கள் பின்பற்றப்படுகின்றனவா என்பது தொடர்பில் ஆராய்வதற்கு, போக்குவரத்துப் பொலிஸாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது - என்றார். (ஓ.4)



# 30 வருடங்கள் பணியாற்றிய பஸ்ஸை மண்டியிட்ட சாரதி

கொழும்பு, ஜூன் 30

30 வருடங்கள் சாரதியாகப் பணியாற்றியவர், தான் பணியாற்றி பஸ்ஸுக்கு முன்னால் மண்டியிட்டு வணங்கியுள்ளார்.

இந்த நெகிழ்ச்சியான சம்பவம் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பலங்கொடை டிப்போவில் நடந்துள்ளது. சாரதியான சமன் ஹேம குமார என்பவர் தனது சேவையிலிருந்து ஓய்வுபெற்றதை அடுத்து, தான் பயன்படுத்திய பஸ்ஸுக்கு முன்னால் மண்டியிட்டு வணங்கியுள்ளார்.

இவர் தான் பணியாற்றிய காலப்பகுதியில் பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள் மற்றும் தனியார் ஊழியர்களை தாமதமின்றி பணிக்கு அழைத்துச்சென்றுள்ளார்.

அத்துடன் ஏனைய பயணிகளுக்கான சேவையையும் தாமதமின்றி உரிய நேரத்தில் மேற்கொண்டுள்ளார். அதனால் இவர் அனைவரதும் பாராட்டுக்களையும் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ.4)



# நாடு இனியும் முடக்கப்படாது

## கொவிட் தடுப்பு செயலணி அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 30

நாட்டில் தற்போதுள்ள நிலைமைகளால், தொடர்ந்து நாட்டை முடக்கிவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கொவிட் தடுப்பு ஜனாதிபதி செயலணி தெரிவித்துள்ளது.

இறுதியாக இடம்பெற்ற கூட்டத்தில் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை முடக்குவதற்குப் பதிலாக பல்வேறு பயணத் தடைகளை விதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொவிட் தடுப்பு செயலணி மற்றும் சுகாதாரப் பிரிவு ஆகியவை இணைந்து, நாட்டில் நாளாந்தம் பதிவாகும் கொவிட் நிலைமை தொடர்பில் கண்காணித்து வருகின்றன. அதில் கிடைக்கும் தரவுகளுக்கமைய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்.

அவசியம் ஏற்பாட்டால் நாடு முழுவதும் மீண்டும் பயணத்தடை விதிக்கப்படலாம். எனினும் தற்போதைய நிலைமையில் எந்த அவசியமும் ஏற்படவில்லை. தற்போது எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் எதிர்வரும் நாள்களில் கொவிட் நிலைமையால் மாற்றமடையவும் வாய்ப்புகள் உள்ளன - என்றார். (ஓ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஓடிடியில் வெளியாகும் சந்தானம் படம்

நடிகர் சந்தானம் நடிப்பில் உருவாகி உள்ள புதிய படம் ஒன்று அடுத்த மாதம் நேரடியாக ஓடிடியில் வெளியாக உள்ளது என தகவல் வெளியாகி உள்ளது.

தமிழ் திரையுலகில் முன்னணி காமெடி நடிகராக வலம்வந்த சந்தானம், தற்போது படங்களில் ஹீரோவாக நடித்து வருகிறார். இவர் கைவசம் 'டிக்கிலோனா', 'மன்னவன் வந்தானடி', 'சர்வர் சுந்தரம்', 'சபாபதி' என ஏராளமான படங்கள் உள்ளன. இதில் 'சபாபதி' படம் நேரடியாக ஓடிடியில் ரிலீசாக உள்ளது எனத் தகவல் வெளியாகி உள்ளது.

இப்படம் அடுத்த மாதம் ஓடிடி தளத்தில் வெளியிடப்பட உள்ளது எனக் கூறப்படுகிறது. விரைவில் இது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.



சரண்யா @Saranallu_A

புத்தகங்கள் பேச ஆரம்பிக்க மனிதன் ஊமையாகின்றான்!!

இம்சை அரசி @queentwtz

நட்பு ஒரு புத்தகம் போன்றது, அதை நிமிடங்களில்
அழித்து விடலாம்..
ஆனால் அதை எழுத ஆண்டுகள் ஆகும்!!

# மனிதம் பற்றிய உளவியல் தகவல்



1. ஏழாண்டுகளுக்கு மேலாக நீடிக்கும் நட்பு வாழ்நாள் முழுதும் நீடிக்குமாம்.
2. எல்லாவற்றுக்கும் எரிச்சல் படுகிறீர்கள் என்றால் யாரையோ 'மிஸ்' பண்றீங்களாம்.
3. குழுவாக அமர்ந்திருக்கையில் யாராவது ஜோக் சொன்னால் வாய்விட்டு சிரித்துக் கொண்டே யாரைப் பார்க்கிறீர்களோ, அவர்தான் உங்களுக்கு ரொம்ப பிடித்தவராவர்.
4. நாளொன்றுக்கு நான்கைந்து பாடல்களை யாவது கேட்பவர்களுக்கு நினைவாற்றல் கூடும், நோய் எதிர்ப்பு சக்தி வளருமாம், மன அழுத்தத்துக்கான வாய்ப்பு 80 சதவீதம் குறையுமாம்.
5. உங்கள் மனதை யாராவது காயப்படுத்தி ருந்தால், அவரை மன்னிப்பதற்கு உங்கள் மூளை சராசரியாக 6 முதல் 8 மாதங்கள் அவகாசம் எடுத்துக்கொள்ளுமாம்.
6. சர்ச்சைக்குரிய விஷயங்களில் கருத்து சொல்லாமல் விடுபவர்கள், பயந்தவர்கள் இல்லையாம், புத்திசாலிகளாம்.
7. மிக விரைவில் ஏமாற்றத்தை சந்திப்பவர்கள், யாரையுமே நம்பாதவர்கள் தானாம்.
8. ஒருவருக்கு கோபம் அதிகமாக வருமானால் அவர் பதற்றமாக இருக்கிறார் என கருதமுடியும்.

# விநோத காதல்

ரோமியோ ஜுலியட், லைலா மஜ்னு மாதிரி காதல் வரலாற்றில் இடம்பிடிக்க நினைத்தது இந்த உக்ரைனைச் சேர்ந்த காதல் ஜோடி. அதற்காக 24 மணி நேரமும் ஒன்றாக இருக்க நினைத்தனர். ஒரு நொடி கூட ஒருவரைவிட்டு இன்னொருவர் பிரியக்கூடாது. என்ன செய்தாலும் இருவரும் சேர்ந்து செய்ய வேண்டும். இதன்படி பிப்ரவரி 14ம் தேதியன்று அலெக்ஸாண்டரின் வலது கையையும் விக்டோரியாவின் இடதுகையையும் கைவிலங்கால் பிணைத் துக்கொண்டனர்.



தங்களது ஒவ்வொரு நடவடிக்கையையும் வீடியோவாக்கி இணையத்தில் வெளியிட்டு லைக்குகளை அள்ளினர். ஆனால், நாள்கள் செல்லச் செல்ல இருவருக்குமே சலிப்புத் தட்டி விட்டது.

ஒருவரின் அனுமதி இல்லாமல் இன்னொருவரால் எதுவும் செய்ய முடியாது என்ற நிலை இருவருக்குமே கசப்பான அனுபவத்தைத் தந்தது. ஒருவரை ஒருவர் கைது செய்து வைத்திருப்பதைப் போல உணர்ந்தனர். 123 நாட்களுக்குப் பிறகு கைவிலங்கை உடைத்ததோடு, காதலையும் முறித்துக்கொண்டு பிரிந்துவிட்டனர்!



# இன்றைய நாள்

**மேடம்:** எதிர்பார்த்தபடி முன்னேற்றமான சூழ்நிலையை அடைவீர்கள். உழைப்பின் பலனைப் பெறுவீர்கள். மனம் நிறைவடையும். மனதில் மகிழ்ச்சி நிலவும். பெண்கள் நன்மை காண்பீர்கள்.

**இடபம்:** இன்று சகஊழியர்களுக்கு உதவி செய்ய வேண்டியிருக்கும். மனம் விட்டுப் பேசுவதால் பிரச்சினை ஒன்று முடிவுக்கு வரும். சிறிதளவு அலைச்சல் இருந்தாலும் ஆதாயம் உண்டு.

**மிதுனம்:** குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டாகும். பெற்றோர் ஆதரிப்பர். சக ஊழியருக்கு சற்று உதவி செய்து வாழ்த்தப்படுவீர்கள். யாரையும், எதற்கும் ஓரளவுக்குமேல் நம்ப வேண்டாம்.

**கடகம்:** பொறுப்புணர்வு அதிகரிக்கும். பிரச்சினை ஒன்று முடியும். பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. பொருளாதாரத்தில் முன்னேற்றத்தை காணும் நாளாக இருக்கும்.

**சிம்மம்:** லாபமும், முன்னேற்றமும் இருக்கும். சோர்வான நாள். முன்னேற விரும்புபவர்களுக்குப் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். செலவைச் சற்று நிதானமாக செய்வது நல்லது.

**கன்னி:** கூடுதல் கவனத்துடன் எதையும் செய்வது நல்லது. பரபரப்புடன் கூடிய நாளாக அமையும். மாலைக்கு பின் நிம்மதி வரும். நண்பர் வீட்டில் சுபநிகழ்ச்சி நடக்கும். மகிழ்ச்சி கூடும்..

**துலாம்:** இழந்த செல்வாக்கை இன்று மீண்டும் பெறுவீர்கள். அரசியல்வாதிகள் அதிகாரம் மிக்க பதவியில் அமர்வீர்கள். கலங்கிப்போயிருந்த மனதில் மெல்லத் தெளிவு பிறக்கும்..

**விருச்சிகம்:** குடும்ப ஒற்றுமைக்கு நீங்கள் கவனமாகப் பேச வேண்டும். புதிய வேலைக்கு முயற்சிப்பவர்களுக்குத் தகவல் தாமதமாகும். நாளின் பிற்பகுதி நிம்மதி தரும்.

**தனுசு:** வாய்ப்புக் கிடைத்தாலும் பயன்படுத்துவது உங்கள் கையில்தான் உள்ளது பொருளாதாரம் உயரப் பாடுபட்டுச் சிறிது வெற்றியடைவீர்கள். இன்றுநல்லநாளாக அமையும்.

**மகரம்:** பல நாள் பாடுபட்டதற்கு நன்மை கிடைக்கப்பெறுவீர்கள். நெருங்கிய உறவினர் வீட்டில் சுபநிகழ்ச்சி நடக்க வாய்ப்பு உள்ளது. தடைகளுக்குப் பிறகு நற்செய்தி வரும்.

**கும்பம்:** குழந்தைகளுக்கான செலவு சற்றுக் கூடுதலாக இருக்கும். மனநிம்மதி ஏற்படும். தந்தை விரும்பிய விஷயம் கிடைக்கும்.

**மீனம்:** காத்திருந்த நல்ல செய்தி வருவது தாமதமாகும். பொறுமை தேவை. நண்பர்களுக்கு உங்களால் நல்ல விஷயம் ஒன்று நிகழும். பயங்கள் எதுவும் தேவை இல்லை.

## கணவன்மார்கள் ஒரு சினிமா போன்றவர்கள்...



தயாரிப்பு : அம்மா..!
இயக்கம்: மனைவி... 😊

## மனிதனும்.. அவனது ஆதியும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கத்தின் விலை புதிய உச்சம்!

யாழ்ப்பாணம். ஜூன் 30

யாழ்ப்பாணத்தில் தங்கத்தின் விலை நேற்று வியாழக் கிழமை புதிய உச்சத்தை எட்டியுள்ளது. அதன்படி 24 கரட் தூய தங்கத்தின் விலை ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 500 ரூபாவாக உயர்வடைந்துள்ளது. 22 கரட் ஆபரணத் தங்கத்தின் விலை ஒரு லட்சத்து 4 ஆயிரத்து 50 ரூபாவாக அதிகரித்துள்ளது.

கோரோனா வைரஸ் பரவலால் சர்வதேச பங்குச் சந்தையில் நிலையற்றதன்மை காணப்படுகிறது. அத்தோடு உலகப் பொருளாதாரம் சரிவைச் சந்தித்து வருகிறது. இதனால் முதலீட்டாளர்கள் பாதுகாப்பான முதலீடான தங்கத்தில் முதலீடு செய்கின்றனர். தங்கத்தின் தேவை அதிகரித்து வருவதால் உலக சந்தையில் தங்கத்தின் விலையில் நிலையற்ற தன்மை காணப்படுகிறது. . (ம-26)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
13.11.1951

மறைவு
31.05.2021



### அமரர் பொன்னையா யூட் இலட்சுமணலிங்கம் (சிவராசா)

(உரிமையாளர் - மாதா பித்தளைத் தொழிலகம்)

எம் குடும்பத்தின் வழிகாட்டியே
உம் பிரிவால் கதிகலங்கி நிற்கின்றோம்
வாழ்வு என்னும் ஓட்டத்தில்
பல தடங்களை பதித்தவரே
உம் புன் சிரிப்பும்
அன்பான அரவணைப்பும்
எப்போ நாம் காண்போம்
மண்ணில் நாம் உள்ளவரை உம்மையே
நினைத்து கலங்கும் உம் உறவுகள்

இல.24, சென் மேரிஸ்
2ம் ஒழுங்கை, கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

உமது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

இல - 245. பலாலி வீதி கந்தர்மடத்தில்
இயங்கிய எமது நிறுவனம்
புத்தம் புது பொலிவுடன்
இல - 91, பலாலி வீதி திருநெல்வேலியில்
இயங்குகின்றது என்பதை மகிழ்வுடன்
அறியத்தருகின்றோம்

உங்கள் மழலை செல்வங்களின் உயிரோவியமான புகைப்படங்களுக்கு

**பேபிபோட்டோ**

போட்டோ அன் வீடியோ
BABY PHOTO &VIDEO







கலர் பிறிண்டிங்
அல்பம்
கிறிஸ்டல் பிறேம்
லேசர் கட்டிங்
பிளாஸ்ரிக் ஐடி காட்
டி-சேட் பிறிண்டிங்
மக் பிறிண்டிங்
போட்டோ கொப்பி
லெமினேற்றிங்




எமது பழைய முகவரியில் இயங்கும் வேறு எந்த நிறுவனத்திற்கும் எமக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்பதை எமது வாடிக்கையாளர்களிற்கு அறியத்தருகின்றோம் எமக்கு வேறு எந்தவொரு கிளையும் இல்லை

## மரண அறிவித்தல்



### மூக்கையா சண்முகநாதன்

(வீடியோ விமல் - குட்டி)

வெள்ளாந்தெருவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மூக்கையா சண்முகநாதன் அவர்கள் நேற்று (29.06.2021) செவ்வாய்க் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூக்கையா. அன்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து அன்னலட்சுமி தம்பதியரின் மருமகனும், ரேவதியின் (சிவா) அன்புக் கணவரும், யோஜீவன், யேஜீவன், குகஜீவன் (சென்ஜோன்ஸ் பழைய மாணவர்கள்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதி லிங்கமூர்த்தி, திருமதி சிவஞானசுந்தரம், குலேந்திரன் (வீடியோ விமல்), சந்திரன் (கனடா), திருமதி நித்தியானந்தன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும், நாகேஸ்வரி, அமரர் சந்திராதேவி, மகேஸ்வரி, யோகேஸ்வரன், யோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.06.2021) புதன்கிழமை கோம்பயன் மணல் இந்து மயானத்தில் அமைதியான முறையில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

9/1, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்,
இந்திரன் - 077 7274369
மனைவி - 077 208 7795

## மரண அறிவித்தல்

பிறப்பு
12
03
1943



இறப்பு
29
06
2021

### திருமதி இலங்கைநாதன் மீனாட்சி

நயினாதீவு 5 ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இலங்கைநாதன் மீனாட்சி அவர்கள் நேற்று (29.06.2021) செவ்வாய்க்கிழமை கொக்குவில் கிழக்கிலுள்ள அவரது இல்லத்தில் இறைபதமடைந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளாரும், காலஞ்சென்றவர்களான தம்பையா மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இலங்கைநாதன் (ஓய்வுநிலை அதிபர்), அவர்களின் அன்பு மனைவியும், ஸ்ரீராகவனின் அன்புத் தாயாரும், தர்சினியின் அன்பு மாமியாரும், துவாரகன், துஜிசா, சாகித்தியன் ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், காலஞ்சென்ற கணேசு, கதிர்காமலிங்கம், பார்வதி, சிதம்பரநாதன் மற்றும் தில்லைநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பவானியம்மா, அன்னபூரணி, ஞானசௌந்தரி, இராஜேஸ்வரி, கனக ரெத்தினம், மற்றும் காலஞ்சென்ற குகதாசன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைக்கள் இன்று (30.06.2021) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் கொக்குவில் கிழக்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, அஞ்சலிக்காக நயினாதீவு இல்லத்தில் வைக்கப்பட்டு பி.ப 2.00 மணியளவில் நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

இல.17/31, கலட்டி முந்தல் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
0771169337

தகவல்:
குடும்பத்தினர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன எல்லையில் மீண்டும் இந்திய ராணுவம் குவிப்பு

புதுடில்லி, ஜுன் 30

**இந்திய இராணுவம் சீன எல்லையில் பாதுகாப்பைப் பலப் படுத்தியுள்ளது. எல்லைப் பகுதியில் மேலும் 50 ஆயிரம் இராணுவத்தினரை இந்திய இராணுவம் நிலை நிறுத்தியுள்ளது.**

கடந்த வருடம், சீன இராணுவத்தி னருக்கும் இந்திய வீரர்களுக்கும் இடையே லடாக் பகுதியிலுள்ள கல்வான் பள்ளத்தாக்கில் இடம் பெற்ற மோதலில் இந்திய இராணு வத்தினர் 20 பேர் உயிரிழந்தனர். அதையடுத்து இந்தியா - சீனா எல்லை பகுதியில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து இரு தரப்பினரும் அதிகளவான இராணுவத்தினரை அந்தப் பகுதி யில் நிலை நிறுத்தினர்.



பின்னர் இருநாட்டு இராணுவ அதி காரிகள் மேற்கொண்ட பல சுற்றுப் பேச்சுக்களைத் தொடர்ந்து, எல்லை யில் படைகள் ஓரளவு திரும்பப் பெறப்பட்டன. சீன எல்லையில் தற்போது 2 இலட்சம் இந்திய வீரர் கள் நிறுத்தப்பட்டுள்ளனர். இந் நிலையில், மேலும் 50 ஆயிரம் வீரர்களை சீன எல்லையில் நிறுத் துவதற்கு இந்தியா தீர்மானித் துள்ளது. இந்திய எல்லைப் பகு திக்குள் சீன இராணுவத்தினர் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே கூடுதல் படைகள் நிலைநிறுத்தப்பட்டுள் ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஏ-இ)

## ஒரே நாளில் மூன்று டோஸ் தாதியர்கள் தீயாக வேலை!

புதுடில்லி, ஜுன் 30

தற்போது இந்தியாவில் கொவிட் தடுப்பூசி ஏற்றும் நட வடிக்கை மும்முரமாக நடைபெற்றுவரும் நிலையில், மும்பையில் 15 நிமிட இடைவெளியில் தடுப்பூசியின் 3 டோஸ்களையும் ஏற்றியுள்ளனர்.

கொவிஷீல்ட் தடுப்பூசியைப் பொறுத்தவரையில் இரண்டு டோஸ் தடுப்பூசிக்கு இடையே முதலில் 45 நாள்கள் இருக்கவேண்டும் என்று முதலில் அறிவிக் கப்பட்டது. தற்போது மத்திய அரசு இரண்டு கொரோனா டோஸ் இடையே 84 நாள்கள் இடைவெளி இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

ஆனால் மும்பையில் கவனக்குறைவால் பெண் ஒரு வருக்கு 15 நிமிட இடைவெளியில் 3 தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. மும்பை அருகில் உள்ள தானே யில் காசர்வடாவலி ஆனந்த் நகரில் நடந்த தடுப்பூசி முகாமில் 28 வயதான ரூபாலி என்ற பெண் தடுப்பூசி போட்டுக் கொண்டார். அவர் தடுப்பூசி போட்டுக் கொண்டபிறகு அங்கு காத்திருந்தபோது அவருக்கு அடுத்த 15 நிமிட இடைவெளியில் மேலும் 2 டோஸ் தடுப்பூசியை ஊழியர்கள் ஏற்றியுள்ளனர்.

ரூபாலியின் கையில் 3 தடுப்பூசி போட்டதற்கான அடையாளம் இருக்கிறது. தடுப்பூசியின் நடைமுறை கள் எதுவும் தெரியாது என்பதால் மூன்று தடுப்பூசி போடுவது தொடர்பாக அந்தப் பெண் எதுவும் கேட்க வில்லை. ஆனால் இது தொடர்பாக அந்தப் பெண் தனது கணவரிடம் சென்று தெரிவித்தார். அதிர்ச்சிய டைந்த அவர் அது தொடர்பாக முறைப்பாடு செய்துள் ளார்.

தற்போது இது தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன. ஒரே நேரத்தில் 3 தடுப்பூசிகள் போடப் பட்ட சம்பவம் மிகவும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதுவரை ரூபாலிக்கு எந்த பக்கவிளைவுகளும் ஏற்ப டவில்லை என்று கூறப்படுகின்றது. (ஏ-இ)

## ஐஸ்கிறீம் விற்ற அதே ஊரில் அதிகாரியான சிங்கப் பெண்

புதுடில்லி, ஜுன் 30

இந்தியாவின் கேரளாவில் காதல் கணவரால் கைவிடப்பட்டு, குழந்தை யுடன் வீதியில் எலுமிச்சம் பழம், ஐஸ்கிரீம் விற்று பிழைத்து வந்த பெண், அதே ஊரில் பொலிஸ் அதி காரியாக பணியில் அமர்ந்துள்ள சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தி யுள்ளது.

கேரள மாநிலம் திருவனந்தபுரம் மாவட்டம் காஞ்சிராம்குளத்தை பூர்வீ கமாகக் கொண்டவர் எஸ்.பி.ஆனி சிவா (வயது31). தனது கல்லூரி முதலாம் ஆண்டு படிப்பின்போது பெற்றோர் எதிர்ப்பை மீறி காதலித்து திருமணம் செய்துகொண்டார்.

ஆனி இரண்டு வருடம் காதல் கண வருடன் இல்லற வாழ்க்கை நடத்தி னார். பின்னர் கணவருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடால் 8 மாதக் கைக் குழந்தையுடன் வீட்டை விட்டு வெளி யேற்றப்பட்ட ஆனியை பெற்றோரும் வீட்டில் சேர்க்கவில்லை. அதனால் அவர் ஆதரவற்ற நிலைக்கு தள்ளப் பட்டார். கடைசியாக தனது பாட்டியின் வீட்டில் தஞ்சம் புகுந்துள்ளார்.

ஆனாலும், வைராக்கியத்துடன் இருந்த ஆனி மனதிடத்துடன் வர்க லாவில் பொருள் விநியோகம் செய் வது, எலுமிச்சம் பழம் விற்பது திரு விழாக்களில் ஐஸ்கிறீம், குளிர்பா னங்கள் விற்பனைசெய்வது என கிடைத்த வேலைகளை பார்த்துக் கொண்டு கல்வியையும் விடாமல் தொடர்ந்துள்ளார்.

தற்போது பொலிஸ் தகுதி தேர்வில் தேர்ச்சி பெற்று, வீதியில் எலுமிச்சம் பழம் விற்பனை செய்த ஊரிலே பொலிஸ் அதிகாரியாக ஆனி பணிக் குச் சேர்ந்துள்ளார். அவர் தனது பேஸ்புக்கில் பத்து ஆண்டுகளுக்கு முன்பு, வர்கலா சிவகிரி யாத்திரைக்கு வரும் மக்களுக்கு எலுமிச்சை மற் றும் ஐஸ்கிறீம் விற்றேன். இன்று, நான் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டராக அதே இடத்துக்குத் திரும்புகிறேன் எனகூறி உள்ளார். கேரள பொலிஸின் அதிகாரப்பூர்வ பேஸ்புக் கணக்கு அவரது கதையை ஒரு குறிப்புடன் பகிர்ந்து கொண்டுள்ளது. இது ஒரு போராட்டத்தின் கதை. சவால்களுக்கு மத்தியில் உறுதியுடன் நின்ற எங்கள் சகாவின் வாழ்க்கை கதை என குறிப் பிட்டுள்ளது. (ஏ-இ)




## தடுப்பூசி இயக்கம் வேகம்!

புதுடில்லி, ஜுன் 30

இந்தியாவில் தடுப்பூசி இயக்கத்தின் வேகம் அதிகரித்துள்ளது என்று இந்தியப் பிரதமர் நரேந் திர மோடி தெரிவித்துள் ளார். அமெரிக்காவை விட இந்தியாவில் அதிக ளவு தடுப்பூசி செலுத்தப் பட்டுள்ளது என்று அறி விக்கப்பட்டுள்ள நிலை யில், இது குறித்து கருத்து தெரிவித்துள்ள அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

“இந்தியாவின் தடுப்பூசி இயக்கத்தின் வேகம் அதிகரித்துள்ளது.

அதைச் செயற்படுத்தும் அனைவருக்கும் வாழ்த் துக்கள். அனைவருக் கும் தடுப்பூசி, அனைவ ருக்கும் இலவசம் என் பதே எங்களின் உறுதிப் பாடாக உள்ளது” என்று அவர் தெரிவித்துள் ளார். (ஏ-இ)

## குழந்தைகளிடம் எதிர்ப்பு சக்தி!

புதுடில்லி, ஜுன் 30

இந்தியாவின் மும்பையில் உள்ள 50 வீதத்துக்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு கொவிட் எதிர்ப்புத் திறன் உருவாகியுள்ளது என்று தெரிவிக்கப்ப டுகின்றது.

மும்பை மாநகராட்சி சார்பில் நடத்தப்பட்ட செரோ ஆய்வில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

மும்பையில் 50 சதவீத குழந்தைகளுக்கு ஏற்க னவே கொவிட் தொற்று ஏற்பட்டுவிட்டது. தற்போது ஒன்று முதல் 18 வயதுக்கு உட்பட்டவர்களிடம் நடத்தப்பட்ட ஆய்வில் 51.18 சதவீதம் குழந்தைக ளுக்கு கொவிட் எதிர்ப்புத் திறன் உருவாகியுள் ளமை தெரியவந்துள்ளது.

தற்போதைய ஆய்வில் 10-14 வயதுடையவர்க ளில் 53.43 சதவீதமானோருக்கும் 14 வயதுடை யவர்களில் 51.04 சதவீதமானோருக்கும் கொவிட் எதிர்ப்பு திறன் உருவாகியுள்ளது. இது மிகவும் அதிகம். இதனால் குழந்தைகள் பாதிக்கப்படுவது வெகுவாக குறைவடையும் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது. (ஏ-இ)

## கூடங்குளத்தில் கட்டுமானம்!

கூடங்குளம் அணுமின் நிலைய வளாகத்தில் 5 மற்றும் 6 ஆம் அணு உலைகளின் கட் டுமானப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. சுமார் 50 ஆயிரம் கோடி ரூபா (இந்திய நாணய மதிப்பு) மதிப்பீட்டில் கட்டப்படும், இந்த இரு அணு உலைகளில் எதிர்வரும் 2027 மற்றும் 2028 ஆண்டுகளில் மின் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் ரஷ்ய நாட்டின் உதவியுடன் தலா 100 மெகாவோட் மின்னுற்பத்தி திறன் கொண்ட 2 அணு உலைகள் செயற்பட்டு வருகின்றன.

இங்கு ஏற்கனவே 39 ஆயிரம் கோடி ரூபா மதிப்பீட்டில் 3 மற்றும் 4 ஆவது அணு உலை களை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேவேளை கூடங்குளம் அணு உலைக்கு மக்கள் மத்தியில் எதிர்ப்பு இருந்து வருகின்றது. (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனை

யாழ்ப்பாணம் நல்லூர் செட்டித் தெரு வீதியில் வரிமதிப்பு எண் 10 கொண்டதும் விஸ்தீரணம் நில.பர 01 1/2 யும் வீடும் விற்பனைக்கு உண்டு.

**076 702 3565**

## பெயர் மாற்றம்

119 - 5/2, மெனிங்பிளேஸ், கொழும்பு - 06 ஐ சேர்ந்த, தேசிய அடையாள அட்டை இல. 847631333V ஐ கொண்ட குமுதினி சிவதாஸ் ஆகிய நான், எனது பிறப்புச் சான்றிதழில் காணப்படும் பெயரான சயினி சிவதாஸ் என்பதை இதுவரை எவ் ஆணவங்களிலும் பயன்படுத்தவில்லை என்பதையும் குமுதினி சிவதாஸ் எனும் பெயரையே தொடர்ந்தும் பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே தொடர்ந்தும் கையொப்பமிடுவேன். எனவும் இத்தால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

28.06.2021 — குமுதினி சிவதாஸ்

# போராடித் தோற்றது குரோசியா ஸ்பெய்ன் காலிறுதிக்குத் தகுதி

மட்ரிட், ஜூன் 30

யூரோ கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற ஆட்டத்தில் ஸ்பெய்னிடம் போராடித் தோற்றது குரோசியா. இதையடுத்து ஸ்பெய்ன் அணி காலிறுதிக்குத் தகுதி பெற்றது.

ஆட்டத்தின் 20ஆவது நிமிடத்தில் ஸ்பெய்ன் எதிர்பாரா விதமாக ஒன்கோலைப் பதிவுசெய்ய அது குரோசியாவுக்குச் சாதகமாக அமைந்தது. எனினும் 38ஆவது நிமிடத்தில் பப்லோ பதிலடி கொடுக்க முதல் பாதியின் முடிவில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றிருந்தன. இரண்டாவது பாதியில் 57ஆவது நிமிடத்தில் செசரும், 77ஆவது நிமிடத்தில் பெரனும் ஸ்பெய்னின் சார்பாகக் கோல்களைப் பதிவுசெய்ய 3:1 என்று ஆதிக்கம் செலுத்தியது ஸ்பெய்ன். ஆனால், ஆட்டம் 80 நிமிடங்களைக் கடந்த பின்னர்தான் குரோசியாவின் விடாப்போராட்டம் வெளிப்பட்டது. 85ஆவது நிமிடத்தில் ஒசிக், 92ஆவது நிமிடத்தில் மரியோ அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்ய நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரு அணிகளும் தலா 3 கோல்களைப் பெற்றன. மேலதிக நேரத்தில் ஸ்பெய்ன் ஆதிக்கம் செலுத்தியது. அல்வாரோ 100ஆவது நிமிடத்திலும் மிக்கெல் 103ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 5:3 என்ற கணக்கில் வென்றது ஸ்பெய்ன். (ம)

## கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)
## சபை நிதி-2021

01 வலிகாம்ம் வடக்கு பிரதேசசபை, **சபைநிதியினைக்** கொண்டு கீழ்க் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத் திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

02 தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03 **தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) வடமாகாணம்,** தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வீதி புனரமைப்பு, கட்டட வேலைகளுக்கு கோருகின்றார்.

04 கேள்விதாரர்கள் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், வீதி புனரமைப்பு, கட்டட நிர்மாண அமைப்பிற்கு பொருத்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினைப் பதிவுசெய்தவராகவும் கறுப்புப்பட்டியலில் பெயர் இடம்பெறாதவராயும் இருத்தல் வேண்டும்.

05 தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை(Schedule)பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.

06 ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்குபிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)** தொலைபேசி:-0212241130, தொலைநகல்:-0212243688இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் 30.06.2021 ஆம் திகதியிலிருந்து 14.07.2021வரை காலை 09.00 மணி முதல் 14.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

07 ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்குபிரதேச சபை, காங்கேசன்துறை எனும் இடத்திலிருந்து 30.06.2021ஆம் திகதியிலிருந்து 14.07.2021வரை கா்லை 9.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000.00 செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

08 கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர் பெறுகைக்குழு, வலிகா்மம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை எனும் முகவரிக்கு 14.07.2021 ஆம் திகதி 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படவேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் /பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09 கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | செல்லுபடியாகும் நாட்கள் | திகதி | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1 | NP/14/41(14)/ 05/02/129/CF-09/2021 | எரிகொட்டகை அமைத்தல் - கொட்டுப்பனை இந்துமயானம் | 0.998 | 60 நாட்கள் | C9/C8 கட்டட நிர்மானம் | 63 நாட்கள் | 15.09.2021 | 10000.00 | 13.10.2021 |
| 2 | NP/14/41(14)/ 05/02/130/CF-10/2021 | பெரியதம்பிரான் ஆலயவீதி புனரமைப்பு–மல்லாகம் தெற்கு | 0.986 | 60 நாட்கள் | C9/C8 வீதி நிர்மானம் | 63 நாட்கள் | 15.09.2021 | 10000.00 | 13.10.2021 |
| 3 | NP/14/41(14)/ 05/02/131/CF - 11/2021 | காளிகோவில் 2வது குறுக்கு வீதி வீதி புனரமைப்பு - மல்லாகம் | 1.253 | 90 நாட்கள் | C9/C8 வீதி நிர்மானம் | 63 நாட்கள் | 15.09.2021 | 13000.00 | 13.10.2021 |
| 4 | NP/14/41(14)/ 05/02/132/CF-12/2021 | கும்பலை 4 வது, 05 வது வலது பக்க ஒழுங்கை புனரமைப்பு-அளவெட்டி கிழக்கு | 1.125 | 90 நாட்கள் | C9/C8 வீதி நிர்மானம் | 63 நாட்கள் | 15.09.2021 | 12000.00 | 13.10.2021 |
| 5 | NP/14/41(14)/ 05/02/133/CF-13/2021 | கட்டுப்பிட்டி குறுக்குவீதி புனரமைப்பு – தெல்லிப்பளை | 1.158 | 90 நாட்கள் | C9/C8 வீதி நிர்மானம் | 63 நாட்கள் | 15.09.2021 | 12000.00 | 13.10.2021 |
| 6 | NP/14/41(14)/ 05/02/134/CF-14/2021 | குரும்பசிட்டி அம்மன் கோவில் தெற்கு 1 ஆம் குறுக்குவீதி புனரமைப்பு | 0.923 | 60 நாட்கள் | C9/C8 வீதி நிர்மானம் | 63 நாட்கள் | 15.09.2021 | 10000.00 | 13.10.2021 |
| 7 | NP/14/41(14)/ 05/02/135/CF-15/2021 | சந்தை குறுக்குவீதி புனரமைப்பு - தந்தைசெல்வாபுரம் | 1.234 | 90 நாட்கள் | C9/C8 வீதி நிர்மானம் | 63 நாட்கள் | 15.09.2021 | 13000.00 | 13.10.2021 |
| 8 | NP/14/41(14)/ 05/02/136/CF-16/2021 | வேளவைவீதி புனரமைப்பு- அளவெட்டி மத்தி | 1.540 | 90 நாட்கள் | C9/C8 வீதி நிர்மானம் | 63 நாட்கள் | 15.09.2021 | 16000,00 | 13.10.2021 |
| 9 | NP/14/41(14)/ 05/02/137/CF-17/2021 | அமெரிக்கன் மிசன்தமிழ் கலவன் பாடசாலை வீதி புனரமைப்பு - மாவிட்டபுரம் | 0.579 | 60 நாட்கள் | C9/C8 வீதி நிர்மானம் | 63 நாட்கள் | 15.09.2021 | 6000.00 | 13.10.2021 |
| 10 | NP/14/41(14)/ 05/02/138/CF-18/2021 | குமாரலிங்கம் வீதி புனரமைப்பு -தையிட்டி | 0.837 | 60 நாட்கள் | C9/C8 வீதி நிர்மானம் | 63 நாட்கள் | 15.09.2021 | 9000.00 | 13.10.2021 |
| 11 | NP/14/41(14)/ 05/02/140/CF-19/2021 | மயிலிட்டி உப அலுவலகம் அமைத்தல் -கட்டம்-II | 9.990 | 90 நாட்கள் | C7/C6 கட்டட நிர்மானம் | 77 நாட்கள் | 29.09.2021 | 100,000.00 | 27.10.2021 |

10. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 07.07.2021 ஆம் திகதி பி.ப.15.00 மணிக்கு வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ளமுடியும்.

திரு.சோ.சுகிர்தன்
தலைவர்,
உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,
வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை
30.06.2021

## வீடு வாடகைக்கு தேவை

கொடிகாமம், மீசாலை, வரணி பிரதேசத்தில் போக்குவரத்து வசதியுள்ள அமைவிடத்தில் வீடு வாடகைக்கு தேவை.

தொடர்பு: **075 6683 117**

## மணமகள் தேவை

1989, இந்து, ஹஸ்தம், ஆசிரியர், தெல்லிப்பழை, பதிவு 5993, தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள், பதிவுக்கட்டணத்தில் 20% கழிவு.

**Ensured Quality Lanka, Colombo-04**
www.EQMarriageService.com **076 664 9401**

## மணமகள் தேவை

1988, இந்து, அனுஷம், Doctor, யாழ்ப்பாணம், பதிவு 6014, தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள், பதிவுக்கட்டணத்தில் 20% கழிவு.

**Ensured Quality Lanka, Colombo-04**
www.EQMarriageService.com **076 664 9401**

## மணமகன் தேவை

1983, இந்து, ரோகினி, ஆசிரியர், சாவகச்சேரி, பதிவு 6131, தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள், பதிவுக்கட்டணத்தில் 20% கழிவு.

**Ensured Quality Lanka, Colombo-04**
www.EQMarriageService.com **076 664 9401**

## மணமகன் தேவை

1990, இந்து, கார்த்திகை, Quantity Surveyor, ஆனைக்கோட்டை, பதிவு 6148, தரகர் கூலி இல்லை, Unlimited குறிப்புகள், பதிவுக்கட்டணத்தில் 20% கழிவு.

**Ensured Quality Lanka, Colombo-04**
www.EQMarriageService.com **076 664 9401**

## மணமகள் தேவை

1974, இந்து, கேட்டை, Development Officer, அல்வாய், பதிவு 6084, தரகர் கூலி இல்லை, Unlimited குறிப்புகள், பதிவுக்கட்டணத்தில் 20% கழிவு.

**Ensured Quality Lanka, Colombo-04**
www.EQMarriageService.com **076 664 9401**

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

- மேசன் - 1700.00 - 2000.00
- பெயிண்டர் - 1800.00
- வெல்டர் - 1400.00 - 2000.00
- அலுமினிய பொருத்துனர் - 1500.00-2000.00

தொடர்புகளுக்கு:

**076 866 3944**

**8.30 AM - 6.00 PM** தொடர்புகொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## JAFFNA COLLEGE, VADDUKODDAI
## ADMISSION - 2022

**தரம் 1, தரம் 6 ஆகிய வகுப்புக்களுக்குப்**
**புதிய மாணவர்களை அனுமதித்தல்**

01. விண்ணப்பப்படிவங்கள் 05.07.2021. திங்கட்கிழமை முதல் 20.08.2021 வெள்ளிக்கிழமை வரை கல்லூரி அலுவலகத்தில் காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.00வரை பெற்றுக் கொள்ளலாம். எமது பாடசாலைக்குரிய விண்ணப்படிவங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.
02. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 28.08.2021 வெள்ளிக் கிழமை ஆகும்.
03. விண்ணப்பப் படிவங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்குப் பூரணமாகவும், பிழையின்றியும் நிரப்பபடுதல் வேண்டும். குறிப்பிட்ட முடிவுத் திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
04. தரம்1 க்கான விண்ணப்பப் படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் நிழற்பிரதி ஒன்று இணைக்கப்படல் வேண்டும்.
05. ஒரு விண்ணப்பப் படிவத்திற்கான கட்டணம் 1000/- நேர்முகப் பரீட்சையும்/ தரம் 6க்கான எழுத்துப் பரீட்சையும் 05.09.2021 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரியில் நடைபெறும்.
**06. வயதெல்லை.**
 அ) தரம் 1 இற்கான விண்ணப்பதாரர் 01.02.2016 இற்கும் 31.01.2017 இற்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
 ஆ) தரம் 6 இற்கான விண்ணப்பதாரி 01.02.2011 இற்கும் 31.01.2012 இற்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.

**அதிபர்,**
**யாழ்ப்பாண கல்லூரி,**
**வட்டுக்கோட்டை**


# நாட்டினுடைய அவலத்துக்கு 3 ராஜபக்சக்களும் காரணம்
## ஜே.வி.பி. முழக்கம்

கொழும்பு, ஜூன் 30
'கோத்தாபய, மஹிந்த மற்றும் பஸில் ஆகிய மூன்று ராஜபக்சக்களுமே நாட்டின் இன்றைய அவலநிலைக்குக் காரணம்.
இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,



'இலங்கையை சௌபாக்கியத்தை நோக்கிக் கொண்டுசெல்ல மஹிந்த ராஜபக்சவால் முடியாது என்றும், கோத்தாபய ராஜபக்சவாலேயே அதனைச் செய்யமுடியும் என்றும் ஆரம்பத்தில் கூறியவர்கள், இப்போது பஸில் ராஜபக்சவாலேயே முடியும் என்று கூறி வருகின்றனர்.
அப்படியாயின் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும், பிரதமர் மஹிந்த ராஜபக்சவும் முற்றிலும் தோல்வியடைந்துவிட்டனர் என்றே அர்த்தப்படும்.
இந்த அரசை ஆரம்பத்தில் இருந்தே பஸில் ராஜபக்ச வழிநடத்தியுள்ளதுடன், நாட்டின் வறுமை ஒழிப்புச் செயலணியின் பிரதானியாகவும் இருந்துள்ளார். இதனால் அவரும் இதில் தோல்வியடைந்தவரே.
இவ்வாறானவர்களிடம் நாட்டை ஒப்படைக்க வேண்டுமா என்று மக்கள் சிந்திக்க வேண்டும்' - என்றார். (ம-22)


## கண்ணீர் அஞ்சலி

**யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரியில்**



நேர் மனப்பாங்குடன் குழுவாக கல்லூரியின் உயர்வே கனவாக தோன்றா துணையாக செயற்பட்ட செயற்பாட்டாளர்களில் ஒருவரும், விஞ்ஞான பாடத்தை மாணவர்களிற்குப் போதித்தது மட்டுமன்றி இயல்பாகவே ஆற்றுப்படுத்தும் நல்லாசியரியராகவும் கடமையாற்றிய

**அமரர் சறோஜினிதேவி சிவபாலன்**

அவர்கள் அமரத்துவம் அடைந்து ஒரு மாதம் கடந்த நிலையில் எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துவதுடன் அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு ஆறுதல் கூறி ஆத்ம சாந்தி வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

**செல்வி. பா. மார்க்கண்டு, திரு. இ.அருணகிரிவாசன்,**
**திருமதி. வி. கடம்பமலர், திருமதி மு. ஜானகி,**
**திருமதி. சு. சர்வகுணசீலன்.**



## DISTRICT SECRETARIAT, JAFFNA
## INVITATION FOR BIDS – (IFB-03)

Department Procurement Committee of Jaffna District Secretariat called bids by IFB 03 for Supply & Installation of Sprinkler Irrigation for OFCs and Construction of Drainage System in Navanthurai St.Marry Joseph Road, Navanthurai North under Jaffna DS Division. Please see the above mentioned Invitation for Bids (IFB-03) in Daily News dated 26-06-2021 or on Jaffna District Secretariat website www.jaffna.dist.gov.lk

**Chairman,**
**Department Procurement Committee,**
**District Secretariat,**
**Jaffna**


# தென்றல் அலைவரிசைக்கு புதிய உதவிப் பணிப்பாளர்

கொழும்பு.ஜூன் 30
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தென்றல் அலைவரிசையின் உதவிப் பணிப்பாளராக சிரேஷ்ட ஒலி,ஒளிபரப்பாளரும், கவிஞரும் சட்டத்தரணியுமான ஏ.எம். தாஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.
1995 ஆம் ஆண்டு பகுதி நேர அறிவிப்பாளராக தெரிவு செய்யப்பட்ட ஏ.எம். தாஜ், பின்னர் நிரந்தர அறிவிப்பாளராகி, சிரேஷ்ட அறிவிப்பாளராக பதவி உயர்வு பெற்று, தற்போது உதவிப் பணிப்பாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
போர்க் காலகட்டத்தில் இவர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிராந்திய வானொலியான யாழ்ப்பாணம் பலாலி சேவையில் பல வருடங்கள் பணிபுரிந்துள்ளார்.
ஒலிபரப்புத்துறையில் நீண்ட கால அனுபவம் கொண்ட இவர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுக் கூட்டுத் தாபனத்தில் உள்ள அனைத்து தமிழ் சேவைகளிலும் பணியாற்றியுள்ளார். (4)


## கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)
## மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை-2021

01 வலிகாமம் வடக்கு பிரதேசசபை **மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி** நன்கொடை கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத் திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
02 தேசிய போட்டி கேள்வி கோரல் நடை முறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03 **தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை(கொல்லங்கலட்டி) வடமாகாணம்,** தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வீதிபுனரமைப்பு வேலைகளுக்கு கோருகின்றார்.
04 கேள்விதாரர்கள் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் வீதிபுனரமைப்பு வேலைக்கு பொருத்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினைப் பதிவு செய்தவராகவும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயும் இருத்தல் வேண்டும்.
05 தேவையான தகைமைகள்; கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை(Schedule) பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.
06 ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)** தொலைபேசி:- 0212241130, தொலைநகல்:- 0212243688 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் 30.06.2021 ஆம் திகதியிலிருந்து 14.07.2021 வரைகாலை 09.00 மணிமுதல் 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
07 ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை எனும் இடத்திலிருந்து 30.06.2021 ஆம் திகதியிலிருந்து 14.07.2021 வரை காலை 9.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
08 கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர் பெறுகைக்குழு ,வலிகாமம் வடக்குபிரதேச சபை, காங்கேசன்துறை எனும் முகவரிக்கு 14.07.2021 ஆம் திகதி 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் /பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09 கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாவில்) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்துகேள்வி கேள்விசெல்லுடியாகும் காலம் | | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | செல்லுடியாகும் நாட்கள் | திகதி | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1 | NP/14/41(14)/05 /01/139/PSDG-06/ 2021 | இளவாலை இந்தனை வீதிப்புனரமைப்பு | 7.622 | 90 நாட்கள் | C7/C6 வீதி நிர்மாணம் | 77நாட்கள் | 29.09.2021 | 77,000.00 | 27.10.2021 |

10 கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 07.07.2021 ஆம் திகதி பி.ப.14.30 மணிக்கு வலிகாமம் வடக்கு பிரதேசசபை ,காங்கேசன்துறை அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ளமுடியும்.

திரு.சோ.சுகிர்தன்
தலைவர்,
உள்ளூர் அதிகாரபெறுகைச்சபை,
வலிகாமம் வடக்குபிரதேச சபை,காங்கேசன்துறை
30.06.2021


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல்....

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லாட்சி அரசில் அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுத்திருந்தோம். அவர்களில் பலருக்கு எதிரான வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்தியிருந்தோம். எனினும், இறுதியில் அரசியல் கைதிகளை விடுவிக்க முடியாத துரதிர்ஷ்ட நிலைமை ஏற்பட்டது.

நல்லாட்சி அரசுக்குள் இருந்த முரண்பாடுகள் மற்றும் அன்று எதிரணிப் பக்கம் இருந்த மஹிந்த ராஜபக்ச அணியினரின் எதிர்ப்புக்கள் காரணமாக அரசியல் கைதிகளை விடுவிக்க முடியாத நிலைமை ஏற்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியமைத்திருந்தால் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுவித்திருப்போம். தேர்தல் காலங்களில் இந்த வாக்குறுதிகளைத் தமிழ் மக்களுக்கு வழங்கியிருந்தோம்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்களை புனர்வாழ்வளித்து விடுதலைசெய்த ராஜபக்ச அரசு, அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிய மற்றும் அவர்களின் கட்டளையின் பிர[illegible]ம் செயற்பட்ட தமிழ் இளைஞர்களை நீண்டகாலமாக சிறைகளில் அடைத்து வைத்திருப்பது எந்த வகையில் நியாயம்?

தமக்கு விசுவாசமான மரணதண்டனைக் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, அரசியல் கைதிகளையும் பொது மன்னிப்பின் கீழ் விரைவில் விடுதலை செய்ய வேண்டும்' - என்றார். (ம-22)

## கொரோனா...

ளது.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 45 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது. இவர்கள் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சாவடைந்தவர்களில் 21 ஆண்களும், 24 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 30ஆக உயர்வடைந்துள்ளது என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-22)

## 1,709....

படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்துள்ளது. இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 57 ஆயிரத்து 217ஆக அதிகரித்துள்ளது. கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 23 ஆயிரத்து 471ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக மருத்துவமனைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்து 716ஆக அதிகரித்துள்ளது எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-22)

## எரிபொருள்கள்...

வடக்கு மீனவர் சமாசம் மற்றும் மானிப்பாய் பிரதேச சபை ஆகியவற்றின் ஏற்பாட்டில் இப் பேரணி இடம்பெற்றது.

பேரணியில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், இலங்கை தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் அ. ஜெபநேசன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், சாவகச்சேரி முன்னாள் நகரசபை உறுப்பினர் ஞா.கிஷோர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-20,319)

## பாடசாலைகளை...

கொண்டு ஜூலை நடுப்பகுதியில் பாடசாலைகளை ஆரம்பிக்க அரசு கொள்கையளவில் இணக்கம் கண்டுள்ளது.

இதற்காக கூடிய விரைவில் பாடசாலைகளில் தொற்றுநீக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. அத்துடன் ஜூலை நடுப்பகுதியில் இருந்து கட்டம் கட்டமாக கற்பித்தல் நடவடிக்கை ஆரம்பிக்கும் என்றும் தெரியவருகின்றது.

'சூம்' செயலி மூலமாக கல்வி நடவடிக்கைகள் தொடர்கின்றபோதிலும் வறிய பிரதேச மாணவர்கள் இதனால் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## கொக்குவிலில்....

கொக்குவில் மேற்குப் பகுதியில் 6 மோட்டார் சைக்கிளில் வந்த அந்தக் குழு இரு வீடுகளில் தாக்குதல் நடத்தியுள்ளது. வாள்கள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன் வந்த அந்தக் கும்பல் வீட்டுக்குள் இருந்த பெறுமதியான தளபாடங்களை அடித்துடைத்துள்ளது என்று முறைப்பாடு பதிவாகியுள்ளது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன - என்றனர். (ம-26)

## போத்தலை...

நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இருவர் படுகாயமடைந்தனர். எழுதுமட்டுவாழில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

பிரபல ஜூஸ் உற்பத்தி நிலையத்தில் பணிபுரியும் இருவர் எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்று வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது மதுபோதையில் வந்த இருவர் கண்ணாடிப் போத்தலை உடைத்து அவர்கள்மீது தாக்குதலை நடத்தியுள்ளனர். படுகாயமடைந்த அவர்கள் இருவரும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-159)

## யாழில்...

என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தகவல்கள் தெரிவித்தன.

இதையடுத்து யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 91ஆக உயர்வடைந்துள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நயினாதீவைச் சேர்ந்த 60 வயதுடைய பெண் ஒருவரும், யாழ்ப்பாணம் வெள்ளாந்தெருவைச் சேர்ந்த 60 வயதுடைய ஆண் ஒருவருமே உயிரிழந்தவர்கள்.

அத்துடன், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 5 ஆயிரத்து 291ஆக உயர்வடைந்துள்ளது. இதேவேளை நேற்று 101 பேருக்கு தொற்றுள்ளமையும் உறுதிப்படுத்தப்பட்டது. (ம-26)

## இராணுவச்...

அவரிடம் இல்லை. வடகொரிய அதிபரும் நாட்டைப் பாதுகாக்கப்போகின்றேன் என்றுதான் கூறினார். அங்கு இன்று நடப்பது என்ன? பஞ்சமும் பசியும்தான் வடகொரியாவில் எஞ்சியிருக்கின்றது. அதுபோன்ற நிலைதான் இலங்கைக்கும் ஏற்படலாம் இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் உதயன் குழுமத் தலைவருமான ஈ.சரவணபவன்.

எரிபொருள் விலையேற்றம் உள்ளிட்ட அரசின் பல அதிருப்தியான செயற்பாடுகளுக்குக் கண்டனம் தெரிவித்து பேரணியொன்று வலிகாமம் தென்மேற்கில் நேற்று இடம்பெற்றது. அதில் கலந்துகொண்ட சரவணபவன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்கின்றோம். ஆனால் இங்கு அது எங்கிருக்கின்றது. இந்த நாட்டினுடைய தலைவருக்குத் தன் வாழ்வில் தெரிந்ததெல்லாம் இராணுவம்தான். அவரை தெரிந்தோ தெரியாமலோ பெரும்பான்மை மக்கள் ஆட்சியில் அமர்த்தி விட்டார்கள். இன்று கடுமையாக எதிர்க்கின்றார்கள். அரசிடம் இன்று ஆக்கபூர்வமான திட்டங்கள் எவையும் இல்லை. கடந்த சில நாள்களுக்கு முன்னர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆற்றிய உரையில்கூட நாட்டைப் பாதுகாப்பேன் என்ற பழைய பல்லவியைத்தான் சொன்னாரே தவிர, நாட்டுக்குத் தேவையான திட்டங்கள் உண்மையில் அவரிடம் இல்லை. வடகொரிய ஜனாதிபதியும் நாட்டைப் பாதுகாப்பேன் என்று சொல்பவர்தான். ஆனால் இன்று பஞ்சமும் பட்டினியும்தான் வடகொரியாவில் மிஞ்சி இருக்கின்றது. எனவே நாம் விழித்தெழ வேண்டும்.

சுதந்திரக் கட்சியாக இருக்கட்டும், பெரமுனவாக இருக்கட்டும், ஐ.தே.க.வாக இருக்கட்டும் வடக்கு மாகாண மக்களைப் பற்றியோ அல்லது கிழக்கு மாகாணத்தில் இருக்கும் மக்களைப் பற்றியோ என்றும் கரிசனை கொண்டதில்லை. எனவே நாம்தான் எமது எதிர்ப்பை வெளிப்படுத்திப் போராட வேண்டும். இந்தப் போராட்டத்தைப் பரவலாக்க வேண்டும். அந்த வகையில் இந்தப் போராட்டத்தை ஏற்பாடுசெய்த வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளருக்கும் அவர் தலைமையிலான குழுவினருக்கும் எனது பாராட்டுக்கள் - என்றார். (ம-319)

## சாரதிக்கு...

கிளிநொச்சியில் ஏ9 வீதியால் பரந்தன் நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பேருந்து சாரதிக்கே திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து பேருந்து கரடிப்போக்குச் சந்தியில் வீதியை விட்டு விலகி, அருகிலிருந்த உணவகத்தின் முன்பக்கத்துடனும், மின்கம்பத்துடனும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தை அடுத்து பேருந்தின் முன்பக்கம் பெரும் சேதத்துக்கு உள்ளானது. மின்கம்பம் பாதியாக முறிந்ததுடன், உணவகத்தின் முன்பக்கமும் சேதமடைந்தது.

எனினும் எவருக்கும் காயமோ அல்லது உயிராபத்தோ ஏற்படவில்லை. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-426)

# இ.போ.சபைக்கு பெரும் நஷ்டம்



கொழும்பு,ஜூன் 30

கொரோனாத் தொற்றால் போக்குவரத்துச் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால், இலங்கை போக்குவரத்துச் சபைக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

சாதாரண நாள்களுக்கு 85 மில்லியன் ரூபாவாகக் கிடைக்கப்பெற்ற வருமானம் தற்போது 8 தொடக்கம் 7 மில்லியன் ரூபா வரை வீழ்ச்சி யடைந்துள்ளது என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் கின்சிலி ரணவக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் மாகாணங்களுக்கு இடையிலான பஸ் சேவைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. அனுமதி பெற்ற அத்தியாவசிய சேவைகளுக்காக நாடு தழுவிய ரீதியில் ஒரு நாளைக்கு ஆயிரம் அரச பஸ்கள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

மாகாணங்களுக்குள் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் 2 ஆயிரத்து 600 தொடக்கம் 2 ஆயிரத்து 700 வரையான அரச பஸ்கள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அமைச்சின் சேவையாளர்கள், [illegible] கள், பாதுகாப்பு[illegible] மற்றும் அத்தியாவசிய சேவையாளர்களுக்கு என்று பிரத்தியேக அரச பஸ் போக்குவரத்து சேவைகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதனால் பொதுமக்கள் பொதுப் போக்குவரத்துச் சேவைகளைப் பயன்படுத்தும் வீதம் சடுதியாகக் குடைவடைந்துள்ளது. அத்துடன் பஸ் சேவைகளை முன்னெடுப்பதற்கு வருமானம் போதுமானதாக இல்லை - என்றார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அதிர்ச்சிமேல் அதிர்ச்சி

# உலகச்சம்பியன் பிரான்ஸ் யூரோவில் வெளியேற்றம்!

## நடப்புச் சம்பியன் போர்த்துகலைத் தொடர்ந்து





**உரோம், ஜூன் 30**

**யூரோ கிண்ணத் தொடரில் நேற்று அதிகாலை நடைபெற்ற ஆட்டத்தில் உலகச் சம்பியன் என்ற அந்தஸ்துடன் களமிறங்கிய பிரான்ஸை கடும் போராட்டத்துக்கு மத்தியில் வீழ்த்தி காலிறுதிக்குள் நுழைந்தது பலம்குன்றிய சுவிஸ்லாந்து.**

இந்த ஆட்டத்தின் 15ஆவது நிமிடத்தில் சுவிஸ்லாந்து வீரர் ஹரிஸ் கோலொன்றைப் பதிவுசெய்ய அந்த அணி முதல் பாதியின் முடிவில் 1:0 என்று முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியில் 57ஆவது மற்றும் 59ஆவது நிமிடங்க ளில் அடுத்தடுத்துக் கோல்களைப் பதிவுசெய்து பிரான்ஸுக்கு முன்னிலையைக் கொடுத்தார் பென்சிமா. இந்தத் தொடர் முழுதும் பிரான்ஸின் முதுகெலும்பாகச் செயற்படும் அவர் நேற்றும் தன் பங்களிப்பை வழங்கத் தவறவில்லை.

ஆட்டத்தின் 75ஆவது நிமிடத்தில் போக்பா பிரான்ஸின் மூன்றாவது கோலைப் பதிவுசெய்தார். இதையடுத்து 3:1 என்று முன்னிலை வகித்தது பிரான்ஸ்.

81ஆவது நிமிடத்தில் ஹரிஸும் 90ஆவது நிமிடத்தில் மரியோவும் சுவிஸின் கோல்களைப் பதிவுசெய்ய நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் முடிவில் இரு அணிகளும் 3:3 என்றிருந்தன.

மேலதிகமாக வழங்கப்பட்ட 30 நிமிடங்களில் கோல்கள் எவையும் பதிவுசெய்ய இயலவில்லை. இதனால் பெனால்டிகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை. 5 வாய்ப்புக்களையும் கோலாக மாற்றியது சுவிஸ். பிரான்ஸும் முதல் 4 வாய்ப்புக்களையும் கோலாக மாற்றியிருந்தது. ஐந்தாவது வாய்ப்பை மப்பே கோலாக்கத் தவறினார். இதையடுத்து பெனால்டியில் 5:4 என்று வெற்றிபெற்று காலிறுதிக்குள் நுழைந்தது சுவிஸ்.

யூரோ கிண்ணத் தொடரில் சுவிஸ் காலிறுதிக்குள் நுழைவது இதுதான் முதல் முறை. (ம)




# இங்கிலாந்து அணியிடம் வீழ்ந்தது இலங்கை அணி

### எனினும் இளம் வீரர்கள் சிறப்பான போராட்டம்



செஸ்டர், ஜூன் 30

இலங்கைக்கு எதிரான முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் 5 இலக்குகளால் வெற்றிபெற்றது இங்கிலாந்து அணி. இந்த ஆட்டத்தில் இலங்கை அணி தோல்வியடைந்த போதிலும் இளம் வீரர்கள் சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தினர்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 42.3 பந்துப்பரிமாற்றங்களில் 185 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக அணித்தலைவர் குசல் ஜெனித் பெரேரா 73 ஓட்டங்களையும், வனிந்து ஹசரன்க 54 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கிறிஸ் வோக்ஸ் 4 இலக்குகளையும், வில்லி 3 இலக்குகளையும் பெற்றனர். பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து அணி இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களை பெற்ற போதிலும் அதன் பின்னர் இலங்கை அணி பந்துவீச்சில் சிறப்பாகச் செயற்பட்டது. லிவிங்ஸ்டனை வீழ்த்தினார் கருணாரத்ன. அதன்பின்னர் மோர்கன், பில்லிங்ஸ், மொயின் அலி ஆகியோரை சமீர வெளியேற்ற இங்கிலாந்து சரிவு கண்டது. எனினும் சில பிடியெடுப்புக்கள் தவறவிடப்பட்டதை அடுத்து இங்கிலாந்து அணி மீண்டும் பலம்பெற்று இலங்கையை வீழ்த்தியது. ரூட் இறுதிவரை ஆட்டமிழக்காது 79 ஓட்டங்களைப் பெற்றார். 4 இலக்குகளை வீழ்த்திய வோக்ஸ் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ம)

**TOYOTA CHR உடன் தேவை**

2019, 2020 MODEL LOW MILAGE விற்க விரும்புவோர் தொடர்பு கொள்க.

தொடர்பு:**077 230 6653**

**விற்பனைக்கு**

8 முழம் பனைமரம், 10 முழம், 12 முழம் வளை சலாகைகள் உடைந்த சீற் என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:**077 230 6653**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் ஆறுகால் மடத்தில் 1ம் ஒழுங்கையில் 9 பரப்புக் காணி விற்பனைக்கு. 2 பரப்பாக பிரித்து கொடுக்கப்படும். 1 பரப்பின் விலை 5 இலட்சம் மட்டும். (யாழ் மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து 100 m தூரம்)

தொடர்பு:

**077 468 3354, 077 2880 152, 076 221 2037**

**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**

புறொய்லர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறை யாகவும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**U.S.A பாம்**

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை

**077 868 9500**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.06.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.